861

சந்திரோதயம்

1-2-1940

861 (7754)

வஞ்சகர்களின் மத்தியில் சிக்கியிருக்கும் பிரஸாத் காதலி
சாந்தாவுடன் தன் முன் எதிர்ப்படும் கொடுமைகளை
எதிர்த்து முன்னேறுகிறான்!

கொடுங்கோலன் ஆண்டவனின் தண்டனைக்குத்
தப்ப முடியுமா?

இதையே

**நவீன பாரத் பிக்சர்ஸாரின் சமூக சம்பந்தமான
சரித்திரப் படம்**

★

காலச் சக்கரம்

தெலுங்குப் படம்

சித்தரித்துக் காட்டுகிறது.

★

டைரக்ஷன்	டெக்னிக்	ஸ்டுடியோ
A. கோபால் ராவ் B.A. B.L.	போட்டோகிராபி	பிரக்ஜோதி
K. ராமகோபால் M.A.	T.K. வெங்கட்ராமன்	

நடிகர்கள்:—

முஞ்சுலூரி, பந்தா, நடேசம், சிவகாமய்யா, நாகராஜ ராவ், காசிசெஞ்சு, கோடீஸ்வரராவ், லக்ஷ்மி ராஜம், உமாதேவி, பத்மா, கிருஷ்ணவேணி, சம்பூர்ண

முதலியவர்கள் நடித்தது.

முக்கிய நகரங்களில் கூடிய விரைவில் வெளிவரும்.

Producers:	Distribution :
THE NAVEENA BHARAT PICTURES LTD.,	K. RAJAGOPALA REDDY ESQR.

ST. THOME HIGH ROAD, ADYAR, MADRAS.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2-FEB 1940

சந்திரோதயம்

மாதமிருமுறை 1, 15 தேதிகளில் வெளிவரும்.

"தோட்டனைத் தூறு மணற்கேணி; மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு" —குறள்

ஆரம். 4.	சென்னை. 1940௵ பிப்ரவரி௴ 1௳	முத்து. 20.

பொருளடக்கம்

			பக்கம்
இரண்டரை அணு சண்டை	...	....	2
கம்போடியா	...	வெ. ம.	6
என் டைரி	...	"நாதன்"	9
தபால் பெட்டி	...		15
பாமினி	....	கமலா	17
வாழ்வுத் தோணி	...	ஆ. வ. ப.	21
கமலா	....	ஏ. வெ.	26
நீலா	....	பந்துலு	29
துக்கடாக் கதை	....	எஸ். ஆர். எஸ்.	32
புத்தகப் பார்வை	....	....	34

குறிப்பு:—இப் பத்திரிகையில் வெளிவரும் கட்டுரைகள், கதைகளில் காணப்பெறும் பெயர்கள் யாவும் கற்பனையே, அவை யாரையும் குறிப்பிடுவனவல்ல,

இரண்டரை அணு சண்டை

"என்ன ஸ்வாமி! சண்டை நடக்கிறதா, இல்லையா?"
"நடந்து கொண்டுதான் இருக்கிறது; யார் இல்லையென்று சொன்னது?......"

"இல்லை; நான் நம்பவேமாட்டேன். சண்டை நடப்ப தானால், எங்கே ஒரு சத்தத்தையும் காணோம்......"

"என்னையா! சண்டை நடப்பதானால் உங்கள் தலையில் குண்டு விழுந்தால்தான், நம்புவீர்களோ?"

"இல்லை, உங்கள் தலையில் விழுந்தாலும் நம்பிவிடுவேன்..."
"உங்க தலையில் இடிவிழ; யாரையா உமக்குச் சண்டை நடக்க வில்லை யென்று சொன்னது? நான் பத்திரிகைக்காரன் சொல்றதை நம்பாமல்......இதோ பாருங்கள் சீக்பிரீட்—மாகினுட் அரண் களுக்கு இடையில் சண்டை நடக்கிறது. அப்புறம் பின்லாந்தில் ரஷ்யர்கள் குண்டுமாரி பொழிகிறார்கள்—இந்தியாவில் காங் கிரஸுடன் முன்னணிக் கக்ஷி சண்டைபிடிக்கிறது. அப்புறம் சு. ம. கோஷ்டி, முஸ்லிம்லீக், சனாதனக்கும்பல் முதலியவைகள் காங்கிரஸுடன் போர் தொடுக்கின்றன...இதுகளெல்லாம் சண்டையில்லையா?......"

"உம் அதெல்லாம் நம்பமாட்டேன். தினசரிப் பத்திரிகை களில் அந்தச் சண்டைகள் காரமாய் வரவில்லையே!......"

நமது ஆபீஸுக்கு முன்னால் இந்தமாதிரி ஏகப்பட்ட கூச்சல் கேட்கவே நாம் சென்றுபார்த்தோம். நமது அரசியல் நிருபரும், பொதுஜனமும் கையையும், காலையும் ஆட்டியவாறு இரைச்சல் போட்டுக் கொண்டிருந்தனர். அவர்களை சமாதானப் படுத்தி விஷயம் என்னவென்று விசாரித்தோம்.

பொதுஜனம் "சண்டை நடக்கவில்லை!" என்றார். நிருபரோ "சண்டை நடக்கத்தான் நடக்கிறது" என்றார். நாம் பொது ஜனத்தை நோக்கி "ஸார்! எங்கேயோ சண்டை நடக்கிறதோ, இல்லையோ; அதைப்பற்றி நாம் ஒன்றும் சொல்ல முடியாது. ஆனால் நமக்கு முன்னால் உங்களுக்கும், நமது நிருபருக்கும் சண்டை நடப்பதென்னமோ வாஸ்தவம்! சண்டையைப் பற்றிப் பேசி வீணே ஏன் சண்டை பிடித்துக் கொள்கிறீர்கள்?......" என்று அவரை உள்ளே அழைத்துச் சென்றோம்.

"என்ன ஸார்! நீங்களாவது சொல்லுங்கள்! சண்டை எப்படி இருக்கிறது?" என்றார் பொதுஜனம் "ஐயா பொதுஜனம்! சண்டை சௌக்கியமாய்த்தான் இருக்கிறது. ஜெர்மனியும், ரஷியாவும், ஜப்பானும் இருக்கும்வரை சண்டைக்கு என்ன குறைவு? அவர்கள் மனதுவைத்தால் ஒரு நாளைக்கு நூறு சண்டை பிடிக்கமாட்டார்களா?—மேற்கு போர்முனையில் ஜெர்மனிக்கும், பிரிட்டன்—ப்ரான்ஸூக்கும் சண்டை விளையாட்டு நடந்து கொண்டுதான் இருக்கிறது. 'நீ நோவாமல் அடி நான் ஓயாமல் அழுகிறேன்' என்பதுபோல் சோல்ஜர்கள் அபாரமாக யுத்தம் புரிந்து கொண்டிருக்கின்றனர். இன்னொருபக்கம் ரஷியாவுக்கும், பின்லாந்துக்கும் அகோரப் போர் மூண்டு கொண்டுதான் இருக்கிறது. ரஷியர்களின் பலவீனம் பின்னிஷ்காரர்களால் நாளுக்கு நாள் வெளியாகிக் கொண்டுதான் இருக்கிறது..." என்று நாம் சொல்லி முடிப்பதற்குள் பொதுஜனம் குறுக்கிட்டார்.

"இதுதான் தெரிந்த விஷயமாயிற்றே! யுத்தமென்றால் ஒரு கடபுடா சத்தம் கேட்கிறதா? நாலுகுண்டு வெடிக்கும் தடபுடல் நடக்கிறதா? என்னமோ நான் யுத்த ஆரம்பத்தில் இந்த உலக யுத்தத்தைப் பற்றிப் பிரமாதமாய் எண்ணியிருந்தேன். சென்னையில் விளக்குகளுக்கு 'குல்லாய் போட்டதி'லிருந்தும், பத்திரிகைகள் பண்ணும் கலாட்டாவிலிருந்தும் என் ஆயுளில் ஒரு யுத்தத்தைக் கண்ணாலே பார்த்துவிட்டுச் சாகலாமென்றிருந்தேன். மேலும், இந்த யுத்தம் வெட்டொன்று துண்டு இரண்டாக, சட்புட்டென்று நடந்து தொலைந்தால் அதன் பயனாய் நம்ம நாட்டுக்கும் ஏதாவது சுயராஜ்யம், கியராஜ்யம் வரலாமல்லவா!" என்று பிரலாபித்தார் பொதுஜனம்.

"என்ன ஸார்! எங்கேயோ சண்டை நடந்து விடுவதால் மட்டும் நமக்கு எப்படி சுயராஜ்யம் வந்துவிடும்? நமது நாட்டில் இருக்கும், உள் நாட்டுப் பிரச்னை தீரவேண்டும். வகுப்புக் கலகங்கள் ஒழியவேண்டும்; ஜாதிப் பூசல்கள் தீரவேண்டும்..."

"சரிதான்; என்ன பழைய பல்லவியை ஆரம்பித்து விட்டீர்களே! அது கிடக்கட்டும் சார்! என்னமோ மத்தியில் ஜப்பான் பெயரை இழுத்தீர்களே! சண்டைக்கும் அதற்கும் என்ன சம்பந்தம்?" என்று வார்த்தையை மாற்றினார் பொதுஜனம்.

"என் சம்பந்தம் இல்லை? ரஷிய—ஜெர்மனிக்கும் யுத்தத்துக்கும் எவ்வளவு ஒற்றுமை இருக்கிறதோ அவ்வளவு ஜப்பானுக்கும் இருக்கிறது. ரஷியா, பின்லாந்தில் தன் கைவரிசையைக்

காட்டுகிறது. ஜெர்மன், பிரிட்டன்-பிரான்ஸோடு மல்யுத்தம் புரிகிறது.

"ஜப்பானும் தன் பக்கத்து தேசமான சீனுவில் தன் யுத்த வித்தைகளைக் காட்டிக்கொண்டிருக்கிறது......" என்றோம்.

"கொஞ்சம் பொறுங்கள்! ஜ ப் பா ன் சண்டை பிடித்தாலும், அந்தச் ச ண் டை தனிப்பட்டுத்தானே போய்விட்டது! பிரிட்டனுடன் ஜப்பான் சண்டை பிடித்தாலல்லவா, அதற்கும் உலக யுத்தத்துக்கும் சம்பந்தம் இருப்பதாகச் சொல்லலாம்!......" என்று கேள்வி போட்டார் பொதுஜனஸ்வாமி.

"ஆமாம்; நீங்கள் சொல்வதும் ஒரு விதத்தில் உண்மைதான். இருந்தாலும் ஜப்பான் இனிமேல் உலக யுத்தத்தில் கலந்து கொள்ளலாமென்றுதான் இருக்கிறது........."

"அதெப்படி? எதைக்கொண்டு அப்படிச் சொல்லுகிறீர்கள்...... ?"

"தற்சமயம் ஜப்பான் பிரிட்டனை வம்புக்கிழுப்பதிலிருந்துதான் அ த ன் எண்ணம் அப்படி யிருக்கிறதென்பதைச் சொல்லவேண்டி வந்தது......"

"என்ன, என்ன? ஜப்பான் பிரிட்டனையா வம்புக் கிழுக்கிறது? அட இழவே! இந்தச் சங்கதி யெல்லாம் எனக்குத் தெரியாதே!—எங்கே ஸார்! அந்த ஜப்பான் விஷயத்தைக் கொஞ்சம் தெளிவாய்ச் சொல்லுங்களேன்!..." என்று ஆவலாய்ப் பொதுஜனம் கேட்டார்.

"சிலர் தங்களுக்குப் பெ ய ர் வரவேண்டுமென்று—நாலுபேருக்குத் த ங் க ள் நாமதேயம் தெரியட்டுமென்று மஹாத்மாவையும், காங்கிரஸையும் தூஷிக்கிறார்களல்லவா! பிரபல ஆசாமிகளையும், ஸ்தாபனங்களையும் திட்டினால் திட்டுபவர்களின் பெயர் நாட்டின் சில இடங்களில் அடிபடுமென்பது வாஸ்தவந்தான்.

"இதைத் தெரிந்துகொண்டுதான் இப்பொழுது ஜப்பான், பிரிட்டனை தூஷித்துக் கொண்டிருக்கிறது. உலகத்திலேயே பெ ரி ய சாம்ராஜ்யமான பிரிட்டனை வம்புக்கிழுத்தால் உள் நாட்டில் தன் மதிப்பு உயரு மென்று அது எண்ணி யிருக்கிறது.

"சென்ற 20-ம் தேதி ஜப்பான் அன்னிய நா ட் டு மந்திரி இலாகா 'ஜப்பானிடம், பிரிட்டன் தன் கொள்கையை மாற்றிக்கொண்டாலொழிய, இரு நாடுகளுக்கும் மனஸ்தாபம் ஏற்படுவது நிச்சயம்' என்று பொருள்படும் துண்டுப் பிரசுரங்களை ஜப்பானில் வெளியிட்டிருக்கின்றது.

"கீழ் நாடுகளில் பிரிட்டனின் மதிப்பை எப்படியாவது குறைக்கவேண்டுமென்றுதான் ஜப்பான் அப்படிக் குரைக்கிறது. வெறும் வாயை மெல்லுபவனுக்கு ஒரு பிடி அவல் கிடைத்தால் எப்படி யிருக்கும்? அந்தமாதிரி சம்பவம் ஒன்று இப்பொழுது ஜப்பானுக்குக் கிடைத்திருக்கிறது. அதைக் கொண்டு பிரிட்டனைப் பார்த்து ஜப்பான் உறுமத் தொடங்கிவிட்டது......"

"அப்படிப்பட்ட விஷயம் என்ன நடந்துவிட்டது?" என்று ஆவலாய்க் கேட்டார் பொதுஜனம்.

"சொல்லுகிறோம் கேளுங்கள்: அதாவது, 'அஸாமாமாரு' என்ற ஜப்பான் கப்பலொன்று அமெரிக்காவிலிருந்து ஜப்பானுக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தது. அதில் அநேகம் ஜெர்மனியர் இருந்தனர். சிறிது நாட்களுக்கு முன்

"கொலம்பஸ்" என்ற கப்பல் சமுத்திரத்தில் விழுந்து தற்கொலை செய்து கொண்டதல்லவா! அதிலிருந்து தப்பிய 21-ஜெர்மனியரும் இந்த "அஸாமா-மாரு"வில் இருந்தனர்.

"இந்தக் கப்பலை நடுக்கடலில் நிறுத்தி ஒரு பிரிட்டிஷ் கப்பல் சோதனை போட்டது. அதோடு அதிலிருந்த அந்த 21-ஜெர்மனியரைக் கைதும் செய்தது. ஆனால் இதர ஜெர்மானியர்களை விட்டுவிட்டது.

"ஏற்கெனவே துவேஷம் கொண்ட ஜப்பான் இந்த சம்பவத்தைக் கண்டு துள்ளிக் குதிக்கிறது.

"எங்கள் கப்பலில் வந்தவர்களை நீங்கள் எப்படிக் கைது செய்யலாம்?" என்று கேள்வி கேட்கின்றனர். இச் செய்கையை ஆட்சேபித்து ஜப்பான், பிரிட்டனுக்கு ஒரு கடிதம் அனுப்பி யிருக்கிறது.

"ஜப்பான் பத்திரிகைகள் தங்கள் கூரான பேனுக்களைக் காரமாக உபயோகிக்கின்றன; டோக்கியோவில் ஒரு பிரிட்டிஷ் ஸ்தானாதிபதி இருக்கிறார். அவர் காரியாலயத்தின் முன்பு ஜப்பானியர் கூடி துராக்ரஹம் செய்கின்றனர்..."

"ஆமாம், பிரிட்டிஷ் கப்பல் அப்படிக் கைது செய்தது நியாயமா, தப்பா?" என்று கேட்டார் பொதுஜனம்.

"நியாயம் என்பதுதான் நடுநிலைமை நாடுகளின் அபிப்ராயம். ஜப்பானோ, 'எதிரிகளின் ராணுவத்தைச் சேர்ந்தவர்கள், நடுநிலைமைக் கப்பலில் வந்தால் தான் கைது செய்யலாம். எங்கள் கப்பலில் அப்படிப்பட்டவர்கள் வரவில்லை" என்கிறது.

"பிரிட்டனோ, 'உங்கள் கப்பலில் எதிரிகளின் ராணுவத்தைச் சேர்ந்தவர்கள்தான் முக்கியமாய் வந்தார்கள். நாங்கள் அந்த 21-பேர்களைத்தான் கைது செய்தோம். மற்ற ஜெர்மனியரை விட்டு விட்டோம். இந்த முறையை இது வரை எந்த நடுநிலைமை நாடும் ஆட்சேபித்ததில்லை. மேலும் ஜெர்மனிகூட நடுநிலைமைக் கப்பலில் வந்த போலந்துக்காரர்களைப் பல தடவை கைது செய்திருக்கிறது" என்று வாதாடுகிறது.

"எனினும் ஜப்பான் அதையெல்லாம் காதில் போட்டுக்கொள்ள மாட்டேன் என்கிறது. 'அஸாமா மாரு'வின் கேப்டன்கூட பிரிட்டன் செய்தது நியாயம்தான்" என்கிறார்.

"நியாயமாய் இருந்தால் இருக்கிறது. ஆனாலும் விட்டுக் கொடுக்கப் படாது என்பது ஜப்பானின் கருத்து. முன்னமேயே தூஷித்து வந்த ஜப்பான் இந்த சம்பவத்தை லேஸில் விட்டுவிடுமா, என்ன?"

"என்ன சார்! ஒரு வேளை பிரிட்டனுக்கும், ஜப்பானுக்கும் ஏதாவது சண்டை—கிண்டை வந்துவிடுமோ?" என்று பயந்தார் பொதுஜனம்.

"வந்தாலும் வந்தது; யார் கண்டது? நடக்கும் போக்கைப் பார்த்தால் ஜப்பான் சண்டையை விரும்புகிறது என்றுதான் எண்ணவேண்டி யிருக்கிறது. ஜப்பான் தந்திரத்தில் கைதேர்ந்தது. அதன் மர்மம் யாருக்குத் தெரியும்?

"டின்ட்ஸின் விவகாரம் நமக்கு அதற்குள் மறந்தா போய்விட்டது! அதில் சேம்பர்லேன் ஒரு மூனிக் செய்தாரே ஒழிய தைரியமாய் நடந்துகொள்ளவில்லை,

இந்த ‘அசாமாமாரு’வுக்காக அவர் இன்னொரு மூளைக் போவாரோ, என்னமோ!......”

“அட்டா! ஜப்பானுக்கும், பிரிட்டனுக்கும், ஒருவேளை ஏதாவது மாட்டிக் கொண்டால், அப்புறம் நமக்கு 2½ அணு சாமான் எப்படிக் கிடைக்கும்? என்ன இருந்தாலும் ஜப்பானின் மூளையே மூளை! 2½ அணு விலையிலேயே உலகத்திலுள்ள அத்தனை பொருள்களுக்கும் போட்டியாக அல்லவா பொருள்களை அது உற்பத்திசெய்து தள்ளுகிறது! யுத்தம்வந்துவிட்டால் அப்புறம் ஜப்பான் சாமான்களின் விலைகூட அல்லவா ஏறிப்போகும்! விலையேறினால்கூட பாதகமில்லை; சாமான்களே வராவிட்டால் என்ன செய்கிறது?” என்று பொதுஜனம் சஞ்சலமுற்றார்.

“ஐயா, பொதுஜனம்! ஜப்பான் பலே கெட்டிக்கார தேசம் தான். 2½ அணு விலையில் சகல சமான்களையும் சிருஷ்டிப்பதில் அதற்கு மிஞ்சி எதுவும் இல்லை. இப்பொழுதுகூட சாமான்கள் செய்வதில் அது இதர நாடுகளுடன் போட்டி போடுவதுபோல் சண்டையிலும் போட்டிபோட முன் வந்திருக்கிறது. எந்த விதத்திலோ அது மலிவானவைகளை உற்பத்திசெய்ய வேண்டியது தானே. சண்டையானால் என்ன, சரக்கானாலென்ன? அது இப்பொழுது ஒரு மலிவுச் சண்டையை ஆரம்பித்திருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்களேன்”

“சரிதான்; அப்பொழுது ஜப்பான் பிடிக்கும் சண்டைகூட 2½ அணு சண்டையாகத்தான் இருக்குமோ?” என்று சிரித்துக் கொண்டே நழுவினார் பொதுஜனம். அதன்பின்பு பார்த்தால் மேஜைமீது வைத்திருந்த 2½ அணு போன இடமே தெரியவில்லை.

விளம்பரப்படி இல்லாவிட்டால் பணம் வாபஸ் செய்யப்படும்

மாந்திரீக மோதிரம்

இந்த அபூர்வமான மெஸ்மரிஸ மோதிரம் உயர்ந்த சாமான்களால், ஆச்சரியப்படத்தக்க மின்சார காந்த சக்திகள் உடையதாய் தயார் செய்யப்பட்டிருக்கிறது. இந்த மோதிரம் நடந்தகாலம், நிகழ்காலம், நடக்கும் காலம் முதலியவைகளை ஒரே நொடியில், மாயா சக்தியால் அறிந்துகொள்ளும் திறமை யுடையது. மேலும், இறந்தவர்களுடன் அறிமுகப்படுத்துதல், ஆயிரம், மைல்களுக்கு அப்பால் இருக்கும் விஷயங்களைத் தெரிந்துகொள்ளுதல், புதையல்களைத் தெரிந்து கொள்ளுதல், நோயாளிகளின் குணத்தை அறிதல், காணமல்போன சாமான்களைக் கண்டுபிடித்தல், முத்திரை போட்ட கவரில் இருக்கும் விஷயங்களைத் தெரிந்துகொள்ளுதல், மறைந்திருக்கும் பொருளைத் தெரிந்துகொள்ளுதல், இரகசியமான கேள்விகளுக்குப் பதில் அறிந்துகொள்ளுதல், இம் மாதிரி ஆயிரக்கணக்கான அபூர்வ விஷயங்களை இந்த மோதிரத்தினால், ஒரே வினாடியில் பெற்றுவிடலாம். உபயோகிக்கும் முறை மோதிரத்துடன் அனுப்பப்படும்.

ரு. 2—8—0. தபாற் கூலி அணு 8.

கிருஷ்ண மேஜிகல் ஹவுஸ் சிக்பல்லாபூர் (தென் இந்தியா)

கம்போடியா.

[வே. ம.]

இந்தப் பெயர் தென்னிந்தியாவிற்கு வெகு நன்ருகத் தெரியும். இந்த தேசத்துப் பருத்தியின் விதைகள், தமிழ் நாட்டிலே போடப்பட்டுத்தான், நாம் கம்போடியாப் பருத்தியை சாகுபடி செய்ய ஆரம்பித்தோம்.

நமது காவேரி, கங்கை போல மிகாங் நதியானது, இந்த தேசத்தை போஷித்து வருகிறது. கம்போடியா என்ற பெயருடன் ஒரு மகத்தான ஏரியும் இருக்கிறது. பல நூறு மைல்கள் நீளம் இந்த ஏரி. இந்த ஏரிக் கருகில் அடர்ந்த வனம் இருக்கிறது. இந்த வனாந்திரத்தில் ஆஸ்கர் என்ற மகத்தான புராதன நகரத்தின் உடைந்த கட்டிடங்கள் இருக்கின்றன. இந்த நகரம் அகண்டமாக இருந்ததாம். இதன் மதில்களைச் சுற்றி வருவதற்கு முழுசாக ஒரு நாள் பிடிக்குமாம். இதைக் காத்து வந்த சேனையில் **70,000** யானைகளும் பல பத்து லட்சம் சேனைகளும் இருந்தனவாம். இந்த நகரத்தை ராட்சஸர்களோ, தேவதைகளோ கட்டினுர்ளாம். சுதேசிகள் இந்த வர்ணனைகளையெல்லாம் கொடுக்கிருர்கள். உலகத்தின் இந்த மூலையில் அத்தியாச்சரியமான கோயில் ஒன்று இருக்கிறது. சென்ற காலத்தின் சிறப்பிற்கு இது பெரிய அத்தாட்சியாக இருக்கிறது. இந்தக் கோயிலில் தற்போது குரங்குகளும், பாம்புகளும், பறவைகளும் தான் வாசம் செய்கின்றன. பக்திக்காகவோ விநோதத்திற்காகவோ வரும் பிரயாணிகளுக்கு விவரம் சொல்வதற்காக சில பூசாரிகள் இருக்கிருர்கள். இது ஆதியில் விஷ்ணுவின் கோயிலாக இருந்திருக்க வேண்டும்.

பின்பு புத்தமதத்தினுடைய பீடமாகவும் அமைக்கப் பெற்றிருக்க வேண்டும். புத்தருக்கு சதுரமாக ஒரு கோயில் கட்டப்பட்டிருக்கிறது. இதைச் சுற்றி, இரண்டு வரிசையில் ஆயிரக்கணக்கான தூண்களிருக்கின்றன. நான்கு புறங்களிலும், மேடை போடப்பட்டிருக்கிறது. பக்கத்துக்கு அரைமைல் நீளமாக, மொத்தம் இரண்டு மைல் மேடை போடப்பட்டிருக்கிறது. இந்த மேடை ஒரே மட்டமாக இல்லை. "காலெரி"யைப் போல் படிக்கட்டுகளாகக் கட்டப்பட்டிருக்கிறது. இந்த காலெரி முழுதும் ராமாயண சரித்திரம் பூருவும் சிலைகளால் வரையப்பட்டிருக்கிறது. இதில் மகா சிக்கலான புதிர் இதுதான். அதாவது, இந்தப் பிரதேசத்தில்—வங்காளத்தில் போல—நாயின்மீது எறிவதற்குப் போதுமான பருமனுடைய கல் கூடக் கிடைக்காது. எல்லாம் மணல், சிறிய மணலாயிருந்த பிரதேசம்—மணல் அல்லது மண். இதில் இவ்வளவு கல் கட்டிடங்களை எப்படிக் கட்ட முடிந்தது? என்பது பெரிய ஆச்சரியமான விஷயம். சரித்திரத்தை எவ்வளவு தூரம் ஆராய்ந்துப் பார்த்தாலும் இந்தப் பிரதேசத்தில், இந்தக் கோயிலையோ அல்லது உடைந்து போன நகரத்தையோ கட்டக் கூடிய சாமர்த்தியமும் நாகரீகமும் படைத்த ஜாதியினர், ஒருவரும் இங்கு வசித்ததாகக் காணேம்.

கிரீஸ், என்றும் ரோம் என்றும் வெள்ளைக்காரர்கள் பெருமை யடித்துக் கொள்கிருர்களே—அந்த கிரீஸாவது, ரோமாவது, இவ்வளவு சிறப்பான நாகரீக அடையாளங்களை

வைத்து விட்டுப்போகவில்லை, யென்று வெள்ளைக்காரர் ஒருவரே எழுதுகிறார். இந்த ஸாம்ராஜ்யத்தின் சரித்திரம் இன்னும் ரகஸியமாகவே இருக்கிறது. எகிப்து தேசத்திலிருந்து வந்த ஒரு துஷ்டரோகி ராஜா தான் இந்த சாம்ராஜ்யத்தை ஆரம்பித்ததாகச் சொல்லப்படுகிறது !

கம்போடியா ராஜ்யம் ஒடுங்கி விட்டது. கிழக்கில் சமுத்திரத்தை ஒட்டிய பிரதேசத்தை பிரெஞ்சுக்காரர் கைபற்றிக் கொண்டு விட்டார்கள். மேற்கில் உள்ள பிரதேசத்தில் ஒரு பகுதியை ஸியாம் ஆக்கிரமித்துக் கொண்டு விட்டது.

மிச்சம் இருப்பது **60,000** சதுர மைல். ஜனசங்கை **10**-லட்சம். பானம்பின் தான் ராஜதானி. பிரெஞ்சுக்காரர்கள் தான் ராஜ வம்சம். ராஜ்ய பாரம் செய்வதற்கு உதவி புரிந்து வருகிறார்கள். பிரஜைகளுக்கு வருத்தம் ஏற்படாமல் வரி வசூலிப்பதற்கு கம்போடியாவின் அரசாங்கம் ஒரு பெரிய யுக்தியைக் கண்டுபிடித்துப் பிரயோகித்து வருகிறார்கள். அநேகம் சூதாட்ட வீடுகளை ராஜாவே ஸ்தாபித்திருக்கிறார். இவைகளுக்கு வெளியே சூதாட்டம் நடைபெறக்கூடாது. ஆடுபவர்கள் வரி கட்ட வேண்டும். ஏராளமான பணங்கள் வசூலாகி விடுகிறது. இந்த வரிகளை ஜனங்கள் சந்தோஷமாகக் கட்டுகிறார்கள்.

நதியின் மஹிமை பெற்ற உதவியினால் இந்த தேசம் இயற்கையான செல்வம் படைத்த தேசம். குன்றுகளில் இரும்புச் சுரங்கங்கள் நிரம்ப இருக்கின்றன. மீன் எண்ணெயும் ஏற்றுமதியாகின்றன. நதியில் வரும் மீன் ஒவ்வொன்று **9**—அடி நீளமானது கூட உண்டு. மீன் பிடிப்பதும், பக்குவப் படுத்துவதும் தான் அநேக கிராமத்தார்களுக்கு ஜீவனம்.

சுதேசிகளின் கிராமங்கள் என்றால் கேலிக்கு இடமானவை. வெள்ளம் வந்தால் கிராமங்களெல்லாம் மூழ்கிப் போய்விடும். ஜனங்களும் கொஞ்சம் கூட கவலை கொள்வதில்லை. கேவலமான குடிசைகள், திருப்பிக் கட்டுவது கொஞ்சம் கூட சிரமமில்லை.

மூங்கில் காடுகள் அதிகம். தங்கப் பொடியும் நிரம்பக் கிடைக்கிறது. அதைக் காட்டிலும் உப்பு வகைகள் நிரம்பக் கிடைக்கிறது. ஒரு எரிமலையும் ஒரு மூலையில் வேலை செய்து கொண்டிருக்கிறது.

ஸ்ரீ பழநி ஆண்டவர்

பக்தர்கள் மனோதேக கவலைகளெதுவானாலும் நீக்கி, அருள் ஆரோக்யம் ஐஸ்வரியம் ஆனந்தம் கொடுக்கவல்ல ஸ்ரீ பழநி ஆண்டவர் பாதாரவிந்தத்தில் தங்கள் நாம நக்ஷத்திரத்தால் விசேடமாக ஒருமுறை அர்ச்சனை ஆராதனைகள் செய்து பிரசாத மனுப்ப ரூ. 1—0—0. மாதக் கார்த்திகை தோறும் கட்டளையாக தொடர்ந்து அர்ச்சனை செய்து தபால் மூலம் மாதா மாதம் பிரசாதம் அனுப்ப வருட சந்தா ரூ. 7—0—0. ஸ்ரீ பழநி ஆண்டவர் அபிஷேக பஞ்சாமிர்த சந்தன விபூதி பிரசாதங்களடங்கிய செட் 1-க்கு ரூ. 3—8—0. முன் பணத்துடன் எழுதவும்.

பழநி க்ஷேத்திர வரலாறும் பாடல் திரட்டும் புத்தகத்துடன் பழநிமலை, ஆண்டவர் அழகிய படமும் அண 4.

P. நடராஜ பண்டாரம்,

மலைக்கோவில் அயன்மிராஸ், பழநி. S. I. RY.

இரண்டாவது வெற்றிகரமான வாரம்!

சென்னை பிராட்வே டாக்கீஸில்

27—1—'40 முதல் தினசரி 3 காட்சிகள்.

ஆந்திர தேசத்தையே பிரமிக்கச் செய்யும்
சமூக சித்திரம்.

மள்ளி பெள்ளி

அல்லது

புனர் விவாகம்

தெலுங்கு படம்.

Y. V. ராவ்,
காஞ்சனமாலா நடித்தது.

சென்னை ஸ்ரீ ஜெகதீஷ் பிலிம்ஸாரின் வெற்றி
கரமான படம்.

**தமிழ் நாடெங்கும் குதூகல ஆரம்ப
தினத்தை எதிர்பாருங்கள்!**

என் டைரி

"நாதன்"

மாப்பிள்ளை மறைந்தார்!

மூதன் முதலிலே சிலரைக் கண்டால் அவர்களிடத்திலே நமக்கு ஒருவித அன்பும், ப்ரேமையும், பக்தியும், விசுவாசமும் ஏற்படுவதுண்டு. இன்னும் கொஞ்ச நேரம் அவர்களுடன் பேசிக் கொண்டிருக்கலாகாதா, என்று நமது மனம் ஏங்குகிறது.

ஆனால் இன்னும் சிலரைக் கண்டு விட்டாலோ, அவர்களிடம் வெறுப்பு, கோபம், துவேஷம் எல்லாம் ஏற்படுகிறது. இந்த பிரகஸ்பதி பேச்சை எப்பொழுது நிறுத்துவான் என்று நமது அதே மனம் துடிதுடிக்கிறது.

இது உலக சுபாவம். எவனும் அவனவன் குணம், நடத்தை, போக்கு இவைகளின் தன்மைக்குத் தக்கபடிதான் பிறரிடத்திலே மரியாதையையும், பெருமையையும் அடைகிறான்.

நானும், கமலாவும் அன்றைக்கு ஹாலில் உட்கார்ந்திருக்கையில் ஒரு பெரியவர் உள்ளே வந்தாரல்லவா! அவர் மேற்சொன்ன இரண்டாவது கோஷ்டியைச் சேர்ந்தவர். அவரைப் பார்த்தவுடன் எங்களுக்குள் அவர்மீது வெறுப்புத்தான் தோன்றியது.

"அப்பா இருக்காரா?..." என்று பல்லை யிளித்துக்கொண்டே அவர் எங்களுக் கெதிரிலிருந்த ஒரு நாற்காலியில் உட்கார்ந்தார்.

"யாரோட அப்பாவைக் கேக்கறயள்?" என்றாள் கமலா. அந்தக் கிழவர் எங்களிருவரையும் மாறிமாறிப் பார்த்தார். என்ன சொல்வதென்று சிறிது நேரம் யோசனை பண்ணினார்.

பின்பு ஏதோ தீர்மானித்தவராய் "ஏன், உங்க அப்பாவைத்தான் கேட்கிறேன். அவர் எங்கே?" என்று கமலுவைக் கேட்டார் அவர். கமலா விஷமப் புன்னகையுடன் என்னை நோக்கினாள்.

"எண்டிம்மா! தாத்தா கேக்கறார்; கல்லுப் பிள்ளையார் மாதிரி ஒக்காந்திண்டிருக்கறயேடி!" என்றேன் நான்.

"என் தாத்தா! எங்க அப்பாவைத் தானே கேக்கறயள்? அவர் ஸ்ரீ வைகுண்டம் போயிருக்கார்..." என்றாள் கமலா சிரிப்பை அடக்கிக் கொண்டு. "ஸ்ரீ வைகுண்டமா? என்னிக்குப் போனார்?..." என்றார் மீண்டும்.

"அவர் போய் அஞ்சு வருஷமாகிறது..." என்று கமலா முடிப்பதற்குள், பெரியவர் "என்ன, என்ன? அஞ்சு வருஷமா?" என்று தூக்கி வாரிப் போட்டவராய்க் கேட்டார்.

"ஆமாம் தாத்தா, ஆமாம்" என்றாள் கமலா.

"என்னிக்குத் திரும்பி வருவார்?" என்று பெரியவர் கவலையுடன் கேட்டார்.

"நான் என்னத்தைச் சொல்றது போங்க. அவர் என்றைக்குமே திரும்பி வரமாட்டார்..." என்று ஏளனமாகப் பார்த்துக் கொண்டே சொன்னாள் கமலா.

"என்னம்மா, நிஜமா? அல்லது தமாஷா? நான் அவரைக் கண்டு முக்கியமான விஷயம் பேசணும்..." என்று பெரியவர் சொன்னார்.

"அப்படியானா, அவரை நீங்கள் ஸ்ரீ வைகுண்டத்துக்கே போய்த்தான் பாக்கணும்; அதுக்கு ஒரே ஒருவழி இருக்கு. ஏதாச்சும் குளமோ, குட்டையோ பாத்து விழுந்து உயிரை விட்டுட்டால் ஸ்ரீ வைண்டத்துக்கு சீக்கிரமாய்ப் போய்ச்சேரலாம்..." என்று கமலா கூறினாள்.

"அப்படீன்னா உங்கப்பா செத்துப் போய்—அடடா! எனக்குப் பைத்தியமே புடிச்சுடும் போலிருக்கே!" என்று தடுமாறினார். நாங்களிருவரும் கலகல வென்று விழுந்து விழுந்து சிரித்தோம்.

"என்னடி இது? பூகம்பமா? புயலா?" என்று கோபத்துடன் கேட்டுக் கொண்டே உள்ளேயிருந்து வந்த என் தாயார் அந்தப் பெரியவரைப் பார்த்துவிட்டாள்.

உடனே அவள் முகத்தில் ஒருவித சங்கோஜமும், மரியாதையும் தோன்றியது.

"எப்பொ வந்தயள்? ஊரிலே எல்லாரும் சௌக்கியமா? நீங்கள் போட்ட கடுதாசி வந்து சேர்ந்தது—இன்னிக்கு அவர்கூட இத்தனை நாழி உங்களை எதிர்பார்த்திண்டிருந்தார்......" என்றாள்.

அவர் தன் தங்கப் பல் வரிசைகளை அம்பலத்தில் காட்டிக் கொண்டே "இப்பொழுதான் வந்தேன். எல்லோரும் க்ஷேமந்தான் அவர் எங்கே போயிருக்கிறார்?" என்று கேட்டார்.

"வந்து-அவர் மாம்பலம் போயிருக்கிறார். அஞ்சு மணிக்குள் வந்துடுவார்; ரொம்பக் களைப்பா இருக்காப் போலிருக்கே! எழுந்திருங்கோ, கொஞ்சம் காப்பி சாப்பிடலாம்..." என்று அம்மா உபசாரம் செய்தாள்.

அம்மா செய்கிற தடபுடல்களைப் பார்த்தால் வந்திருப்பவர் கொஞ்சம் படே ஆசாமிபோல் தான் தெரிந்தது. சிறிது பயத்துடன் கமலாவைப் பார்த்தேன். அவள் மிரளமிரள என்னை நோக்கினாள்.

நாங்கள் முழிப்பதைப் பார்த்த அம்மாள் "ஏண்டி சரோஜி! யாரானும் பெரியவா வந்தா மட்டு மரியாதை யிங்கிறது கொஞ்சமேனும் வேண்டாமோ! அதென்னடி அப்படி அளவுக்குமீறிய சிரிப்பு? கமலா, நீயாவது அவளுக்குப் புத்தி சொல்லப்படாதோ?" என்று கடிந்துகொள்பவள் போல் கேட்டாள்.

நாங்கள் இருவரும் மௌனம் சாதித்தோம். "அதுக்கென்ன, பரவாயில்லே. குழந்தைகள்தானே! ஏதோ தமாஷுக்குச் சிரித்தன—அது சரி; இதிலே உங்க பெண்யாரு?" என்றார் அசட்டுப் பார்வையுடன் அவர்.

"இதோ இவள் தான் எங்க பொண்ணு. பெயர் சரோஜினி தேவி; அவள் சரோஜினியின் கிளாஸ்மேட்" என்று எங்களைக் கிழவருக்கு அறிமுகப் படுத்திவைத்தாள் அம்மா.

"எம்மா! அந்தத் தாத்தா யாரம்மா?..." என்று நான் கேட்டேன். அம்மா ஏதோ சொல்ல வாயெடுத்தவள் நிறுத்திக் கொண்டு என்னமோ யோசித்தாள். "ஏன் அம்மாமி, யோசிக்கறயள்? அவாளை

எங்களுக்கு 'இன்ட்ரொட்யூஸ்' பண்ணிவைக்கப் படதோ?'' என்றுள் கமலா.

என் தாயார் புன்சிரிப்புடன் ''உம் சொல்லட்டுமா? கமலா, அசூர் தாண்டி தஞ்சாவூரிலே பெரிய மிராஸுதாரர். நம்ம ஆத்துக்கு அவர் மாப்பிள்ளேயா வரப்போறுர். நம்ம சரோஜாவை அவருக்குத்தான் கலியாணம் செய்ய றதாகப் பேசியிருக்கு?...'' என்று அம்மா சொல்லி முடிக்குமுன் நான் துள்ளியெழுந்தேன்.

என் உடம்பிலே ஆயிரம் தேள் கொட்டிய மாதிரி தோன்றியது. எல்லோரையும் கொன்று விடுபவள் போல் முறைத்துப் பார்த்துவிட்டு வெகுவேகமாக என் அறைக்குள் சென்றேன். தொப்பென்று கட்டிலில் விழுந்தேன். கோபமும் துக்கமும் பொங்கி, கண்ணீர் வெள்ளத்தைப் பெருக்கியது.

கமலா எனக்கு எவ்வளவோ தேறுதல் கூறிப் பார்த்தாள். அவளால் முடியாமல் கடைசியில் தன் வீட்டிற்குச் சென்றுவிட்டாள்.

இரவு 7-மணிக்கு அப்பா வந்தார். அந்தக் கிழவாலிபரைக் கண்டதும் அவருக்கு எல்லேயில்லாத சந்தோஷம் உண்டாயிற்று. இருவரும் வெகு நேரம் ஏதோ 'கிசுமுசு' வென்று பேசிக்கொண்டிருந்தனர். அதாவது என் வாழ்வைக் கெடுக்க அவர்கள் சதியாலோசனே செய்து கொண்டிருந்தனர்.

அம்மாவோ தனக்குப் பணக்கார மாப்பிள்ளே கிடைத்துவிட்டார் என்ற சந்தோஷத்தில் குமரி மாதிரி ஓடிஓடி வேலே செய்தாள். நவநவமான பக்ஷணங்களேப் பண்ணிஞள். புதுபுதுக் கறிவகைகளேச் சமைத்தாள்.

இரவு போஜனத்துக்கு எல்லோரும் தயாராஞர்கள். அம்மா என் அறைக்குள் வந்தாள். ''சரோஜி! ஏண்டி இப்படி வாதிக்கறே? இப்போ உனக்கு என்ன வந்துடுத்து. இப்படி அழறே?'' என்றுள் அம்மா.

''என்ன வந்துடுத்துன்னு கேக்கறே? எனக்குக் கொள்ளே வந்துடுத்து--காலரா வந்துடுத்து--ப்ளேக் வந்துடுத்து. இப்பொ உனக்கு சந்தோஷந்தானே!......'' என்றேன் எரிச்சலுடன்.

''சரிசரி, வாயை மூடு! பேசற லக்ஷணத்தைப் பாரு! இப்பொ நீ சாப்பிட வரயா, இல்லேயா? எல்லோரும் உனக்காகக் காத்திண்டிருக்கா...''

''மனசுக்கு சந்தோஷமா இருக்கறவாளெல்லாம் போய் விருந்து சாப்பிடுங்கோ! என் மனசுக்கு துக்கமாய் இருக்கிறது. அதனுலே எனக்கு சாப்பாடுவேண்டாம்.

இச்சமயம் அப்பா உள்ளே பிரவேசித்துக் கொண்டே ''என்னடா கண்ணு சரோஜி! ஏண்டிம்மா இப்படி முறண்டு பண்றே? என் கண்ணோல்லியோ! எழுந்திரும்மா சாப்பிடலாம்...'' என்று அன்புடன் கூறிஞர்.

ஆனுல் அவருடைய இப்போதைய அன்பு ஏதோ ஒரு ஏமாற்றுப் போலவும், வேப்பங்காய் போலவும் இருந்தது. எனப்பா, எல்லாரும் என்னேப் போட்டுக் கொலே பண்ணுகிறீர்கள்? எனக்குச் சாப்பாடும் வேண்டாம், கீப்பாடும் வேண்டாம். அவா அவாள் வேலேயைப் பாத்துண்டு போங்கோ!'' என்று துக்கத்துடன் கூறினேன்.

''உம் இதெல்லாம் நீங்க கொடுத்த இடம். நான் அப்பவே சொன்னேன் இந்த தடிக் கழுதைக்குப் படிப்பு வாண்டாம்னு...'' என்று அப்பாவைக் கோபித்துக் கொண்டே தன் தலேயில் அடித்துக் கொண்டாள் அம்மா.

''சரிசரி; உன் திருவாயை மூடு—அவ கிடக்கறு; நீ எழுந்திரு

கண்ணு...'' என்று அப்பா என்னைத் தாஜா பண்ணினர்,

''அப்பா! நீங்க செய்யற தாஜா எல்லாம் எனக்குத் தெரியும். அந்தக் கிழட்டுப் பிணம் வீட்டைவிட்டு வெளியே போனல்தான் சாப்பிடுவேன்'' என்றேன்.

''என்ன குழந்தை இப்படிச் சொல்றே! நாளைக்கு அவரை மணந்து கொண்டதுக் கப்புறம் இப்படிச் சொல்ல முடியுமா? பேசாமெ எழுந்திரு...'' என்ருர் தந்தை.

''அப்பா, ஒன்னுமட்டும் சொல்றேன். நான் பிணமானதுக்கப்புறந்தான் அந்தக் கிழவன் என்னை மணக்க முடியும். அதுக்கு முன்னலே இந்த சரோஜினியின் எண்ணத்துக்கு விரோதமா, எவரும் எதையும் செய்ய முடியாது...'' என்றேன் வெகு கோபமாக.

அப்பா என் பக்கத்தில் வந்து என் தலையைத் தடவிக் கொண்டே ''அம்மா சரோஜி! அவ என்ன அப்படிக் கிழவராய் விட்டார்? 40 வயசு கூட ஆகலே; தலே நரைச்சிருக்கறதாக நீ நினைக்கலாம். ஆனல் அது பித்த நரை; அதனலே என்ன? அவருக்கிருக்கிற பணமோ அளவிடமுடியாதது. உன்னை அவர் கலியாணம்செய்ய வந்ததே நமது பாக்கியம் ..'' என்று முடிப்பதற்குள் ''அப்பா! இந்தத் தலை தடவு படலமெல்லாம் என்னிடம் வேண்டாம், ஒரே பேச்சு, முடியாதென்ருல் முடியாதுதான்...'' என்றேன் தீர்மானமாக.

அப்பா வெகுநேரம் என்னைக் கெஞ்சிப் பார்த்தார்; காலைப்பிடித்துப் பார்த்தார். கடைசியில் மனமுடைந்து பேசாமல் வெளியே சென்றுவிட்டார்.

''அடி, திமிர்பிடித்த கழுதை! நான் மட்டும் இந்தக் கலியாணத்தை முடிச்சுவைக்கலேன்ன, நான் உன் தாயாரே அல்ல'' என்று சபதம் கூறிவிட்டு விர்ரென்று சென்ருள் அம்மா. நான் படுக்கையில் குப்புறப் படுத்துக் கொண்டு இரவெல்லாம் விசித்து அழுதேன்.

பொழுது விடிந்தது. ஆனல் என் இதயத்தில் பொங்கிக் குமுறிக் கொண்டிருக்கும் கனவுகளுக்கு என்று விடிவுகாலம்? அந்தக் காலைவேளையில் ஜனங்கள் எல்லோரும் தம்தம் கவலைகளை மறந்து பலவித வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். பட்டணமே சுறுசுறுப்பாய் மனேவேகத்தில் சுழல்வதுபோல் தென்பட்டது.

ஆனல் என் மனம்மட்டும் எதோ எல்லையில்லா வெட்டவெளியில் அகப்பட்டு திசை தெரியாமல் திகைத்து செயலிழந்து சோம்பிக் கிடப்பது போல் இருந்தது. எனக்குச் சுற்றிலும் யாரோ என்னைத் துலைக்கப் படுகுழி தோண்டுவது போன்ற உணர்ச்சி என் இருதயத் துடிப்புடன் கலந்து தோன்றியது.

எதோ வேண்டா வெறுப்புடன் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு அறையில் சென்று சோபாவில் படுத்தேன். வேலைக்காரி அம்புஜம் ஒரு தட்டில் டிபன் கொண்டுவந்து வைத்தாள். ராத்திரி பட்டினியிருந்ததால் எனக்கிருந்த அகோர பசி என் உண்ணுவிரத உறுதியைக் கெடுத்து விட்டது.

டிபனுக்குப்பின், ரகுவுக்கு என் நிலைமையை யெல்லாம் தெளிவ படுத்தி ஒரு கடிதம் எழுதுவதற்கு யோசனை பண்ணிக் கொண்டிருந்தேன்.

என்னை மணக்கவந்த மணவாளனை கிழவர் மெதுவாகப் பூனை போல் என் அறைக்குள் வந்தார். நான் அவரைப் பார்த்து வேறு பக்கம் திரும்பிக் கொண்டேன்,

அந்த ஆசாமி என் அருகில் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்து கொண்டு "எனம்மா! என்னைக் கண்டால் உனக்கு வேப்பங் காய்போல் இருக்கிற தாக்கும்!..." என்றார்.

"இல்லை தாத்தா! எட்டிக்காய்போல் இருக்கிறது" என்றேன்.

"ஆம், இருக்கத்தான் செய்யும், சரி; இருக்கட்டும். நான் ஒன்று கேட் கிறேன் அதற்கு பதில் சொல்லிவிடு. நான் ஊருக்குப் போகிறேன்; அதாவது என்னைக் கலியாணம் செய்து கொள்ள உனக்கு இஷ்டமா, இல்லையா?..."

"நிச்சயமாக, சத்தியமாக, உறுதி யாக, தீர்மானமாக, கண்டிப்பாக எனக்கு இஷ்டமில்லை. போதுமா பதில்?" என்றேன் ஏளனமாக.

கிழவர் மலைத்துப் போய்விட்டார். சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்தார். "அம்மா, குழந்தை! எனக்கு ஏராள மான சொத்து இருக்கிறது. வீடு வாசலோ அரண்மனை மாதிரி இருக் கிறது. அவ்வளவு பெரிய சொத்துக் கும், வீட்டுக்கும் லக்ஷிமி மாதிரி நீ இருக்கலாம் நீ மட்டும்..." என்று மீண்டும் ஆரம்பித்தார்.

அச்சமயம் கமலா உள்ளே பிரவே சித்தாள். "தாத்தா! உங்க பணத் துக்கும், வீட்டுக்கும் ஆசைப் படறவ ளைக் காட்டிலும், உங்க அழகுக்கும், குணத்துக்கும், வயசுக்கும், ஆசைப்படற பெண் எவளாவது இருந்தா அவள் தலையிலே போய்க் கையை வையுங்கோ..." என்றேன் வெறுப்புடன்.

அதற்குள் கமலா "மாமா! நீங்க எங்க அப்பாவைப் பார்க்கணும்ன்னு சொன்னயளே! ஸ்ரீ வைகுண்டம் போறேளா" என்றாள்.

"ஆமாண்டி கமலா, அவருக்கு ஸ்ரீ வைகுண்டம் போறதுக்கும் வயசாச்சு; கைலாசம் போறதுக்கும் வயசாச்சு. இன்னும் நம்மோடு பேசிண்டிருந்தா எமபுறத்துக்குப் போறதுக்குக்கூட வயசு ஆயுடும்!" என்றேன் பரிகாச மாக; அவ்வளவுதான். மாப்பிள்ளை மாயமாய் மறைந்தார். கமலா கலகல வென்று சிரித்தாள்.

ஜோதிஷ மகுட வர்த்தனர்

9—5—'38-ல் சென்னை ஜோதிஷர் மகாநாட்டின் சபைத் தலைவர்

இந்து மன்னர் சமஸ்தான 25-வது தலைமுறை ஜோதிஷர், பீமகவி, சுகர்புஜண்டர், சாஸ்திர நிபுணர். ஜாதகம் கணிக்க ரூ-2. **ஒரு வருஷத்திற்கு** ஆதாயம் விரயம், குடும்பம், தொழில், கடன், ஆரோக்கியம், காதல், சத்துரு, பிரயாணம், சுபம், **அதிர்ஷ்டம்**, மாதம், நாள், திக்கு, ரத்னம், நெம்பர், வேளை, உலோகம், புஷ்பம், லாட்டரி, ரேஸ், மற்றும் பலாபலன்கள் மாதவாரியாக எழுத ரூ-3. ஓர் திசைக்கு புத்திபலன் ரூ. 3 கேள்வி 6-க்கு ரூ. 1. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

புரபஸர் N. V. **சுப்பிரமணியம்**, J. M., & J. A.
நெ. 7, ஜோதிஷ ஆசிரமம், வாலாஜாபாத். P.O. (சென்னை)
வெளிநாடு வி. பி. கிடையாது. Walajabad. S. I. R.

தபால் பெட்டி

ஸ்ரீமான். பொதுஜனம் அவர்களுக்குப் பேனா எழுதுவது.

அன்புடையீர்,

சென்ற 26–ந் தேதி இந்தியாவெங்கும் சுதந்திர தினம் கொண்டாடப் பட்டது. நானும் என் தாய் நாட்டுக்குத் தொண்டு புரிவதென்று நாலு பக்கம் வரைந்து தள்ளிவிட்டேன். நீங்கள் அந்த சுதந்திர தினத்தை வடை பாயஸத்தைத் தின்று, காங்கிரஸை திட்டாமல் உலகத்திலே என்ன நடக்கிறது என்பதை நினைத்து, பூரண சுயேச்சைக்காகப் பாடுபடுவதென்று பிரதிக்ஞை செய்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

நமக்குள் எவ்வளவோ பேதம் இருக்கிறது. நான் பேனா. நீங்கள் மனிதர். இருந்தாலும் நமக்குள் ஒற்றுமை இருப்பதால்தான் எழுத்துவேலை நடக்கிறது. ஆகவே, பூரண சுயேச்சையை சாதித்துக் கொள்ளவேண்டி ஜாதிச் சண்டை மதப் பிரிவு இவைகளை உதறித் தள்ளுங்கள்.

மாற்றானுக்கு இடம் கொடுக்காதீர்! அவர்கள் துடையில் கயிறு திரித்து விடுவார்கள். உங்களுக்குப் புத்தியும், சக்தியும் இருந்தால், காங்கிரஸுக்கு ஒத்தாசை செய்து விரைவிலே சுயராஜ்யத்தைப் பெறுங்கள்.

"பேனா"

ஸ்ரீமதி பூமிதேவிக்குப் பேனா எழுதுவது.

அம்மணி!

உலகத்திலே அக்ரமங்கள் நடக்கும்பொழுதுதான் நீ உன் தலையை ஆட்டி பூகம்பத்தை உண்டாக்குகிறாயாம். அப்படியானால் துருக்கி என்ன அக்ரமம் செய்தது? பாவம்! அதற்கேன் அவ்வளவு நஷ்டத்தை உண்டாக்கினாய்?

இந்தியாவில் நடக்கும் அக்ரமத்தைக் காட்டிலும் உலகத்தில் வேறு எங்கே நடக்கிறது? இங்கேதான் அந்நிய ஆட்சிக் கொடுமை நடக்கிறது. ஜாதிப் பூசல்கள் நிறைந்திருக்கின்றன. வர்ன பேதங்கள் தோன்றுகின்றன.

ஏழை பணக்காரன் வித்யாசமும், வறுமையின் சின்னங்களும், பொய்—வஞ்சனை—சூது முதலிய படுகுழிகளும் இந்தியாவில்தானே அதிகமாய் இருக்கின்றன! 38 கோடி ஜனங்களில் 48 கோடி கட்சிகள் வேறு எந்த தேசத்திலே இருக்கின்றன?

இப்படிப்பட்ட கொடுமைகள் நிறைந்த இந்த நாட்டில் ஒரு பூகம்பத்தை உண்டாக்கப்படாதா? அப்பொழுதாவது துன்பம் ஒழிந்து இன்பம் மட்டும் மீதியிருக்குமல்லவா? எனக்கென்ன? நான் ஒரு ஜப்பான் பேனா. இந்தியாவோடு பழகிப்போன தோஷத்திலே அதன் நன்மையை விரும்பினேன். உனக்கு இஷ்டமானால் அடுத்த தபாலில் ஒரு பூகம்பத்தை அனுப்பிவை.

"பேனா"

உங்கள் உயர்வுக்கோர் உன்னத வழி.

ஆங்கிலமறியாது அல்லற்படும் அன்பர்களே! மூன்றே வருடத்தில் கேம்பிரிட்ஜ் ஸீனியர் பரீக்ஷை தேற இன்றே முன்னிடம் தேடுங்கள். இங்கிலீஷ் பாடசாலைகளில் இடையில் கல்வி நிறுத்திய இளம் வாலிபர்களே! லோயர் கிரேட் சர்ட்டிபிகேட்டுகளுள்ள ஆசிரியர்களே! உங்கள் வாழ்க்கை முன்னேற முதற் காரணமாகவுள்ள ஆங்கிலப் பயிற்சிக்கு உங்கள் தொழிலுக்கிடையூறின்றி இல்லத்திலிருந்தே ஆங்கிலம் கற்க, முழு விபரங்களுக்கும் இன்றே தம் தம் கருத்தையும், தற்பொழுதுள்ள கல்வி யறிவையும் தெளிவாகக் குறிப்பிட்டு முழு விபரங்களுக்கு எழுதவும்.

R. அச்சுதன் தம்பி B. A.,

தி இங்கிலீஷ் கரஸ்பாண்டன்ஸ் ஸ்கூல், திருவனந்தபுரம் (தென் இந்தியா)

வெற்றி முழக்குடன் வெளிவருகிறாள்!

பாரத சக்தி

உன்னத மாதம் இருமுறை

(சென்னை மாகாண இளைஞர் இயக்க வெளியீடு)

இளைஞர் எழுச்சி, மாணவர் மாட்சி, பாட்டாளிகளின் விடுதலை, விவசாயிகளின் விமோசனம், கடல் கடந்த தமிழர் நலம், மாதர் முன்னேற்றம் சம்பந்தமான உயரிய கட்டுரைகள், உன்னத கவிதைகள், அரிய சிறு கதைகள் கொண்டு வெளிவருவாள்.

எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் ஏஜண்டுகள் தேவை.

தனிப் பிரதி 1 அணா. வருட சந்தா ரூ. 2

விவரங்களுக்கு: 'பாரத சக்தி' மௌண்ட்ரோட் போஸ்ட், சென்னை.

தேவி மார்க் அசல் நெய்

உங்களுடைய அன்றாடும் உபயோகத்துக்கும், விசேஷ காலங்களுக்கும் எங்கள் நெய்யை உபயோகியுங்கள்.

எங்கள் டின்களைப்போல் சாயம் பூசப்பட்ட போலி டின்கள் வருவதால் மார்க்கை கவனித்து வாங்குங்கள்.

N. M. K. ராமசாமி செட்டியார்,

கோயம்புத்தூர்.

பாமினி

— கே. கமலாம்பாள் —

அத்தியாயம் 21 (தொடர்ச்சி)

பிழைத்தவள் மனதில் பலவித சிந்தனைகள்.

சிறிது நேரத்தில் பாமினி பவானியை நோக்கி "உங்களது ஓரகத்தியை நான் இதுவரையில் பார்த்ததே இல்லையே, அவர் இப்பொழுது இந்த மாளிகையிலில்லையா? வேறு எவ்விடத்திலிருக்கிறார்?" என்று கேட்டாள்.

பவானி "அடேயப்பா, எவ்வளவு அவசரம்? எனது மைத்துனர் நரேந்திரர் மனைவிதான் உன்னைப் போலவே அழகுடனிருப்பாள் என்று கூறினேனே,........நரேந்திரருக்கு இன்னும் விவாகம் ஆகவில்லை. ஆனால், விவாகம் நிச்சயம் செய்து விட்டோம். கூடிய சீக்கிரத்தில், உனது தேகநிலை ஒழுங்கான பின் விவாகத்திற்கு முகூர்த்தம் வைத்துவிட வேண்டியதுதான்—அது இருக்கட்டும் பாமினி, நீ இன்னொரு வாலிபனைக்கூட இங்கு சில சமயங்களில் பார்த்திருக்கிறாயல்லவா?" என, பாமினி 'ஆம்' என்றாள்.

பவானி உடனே தான் கையில் எடுத்துக் கொண்டு வந்திருந்த இரு போட்டோக்களை பாமினியிடம் கொடுத்து 'இவைகளைப் பாரு' என்றாள்.

பாமினி அப்படங்களைப் பார்வையிட்ட பிறகு, 'இதில் ஒன்று எனது போட்டோ, மற்றொன்று அந்த வாலிபனது என, பவானி "ஆம், ஆனால், அந்த இரண்டு போட்டோக்களிலுமுள்ள முகங்களுக்கு ஒன்றுக் கொன்று ஒற்றுமை யிருப்பது போலத் தோன்றுகிறது. அந்த வாலிபன் பெயர்தான் 'ராம்மோஹன்' என்பது.

பாமினி "அந்த ராம்மோஹன் என்னும் வாலிபர் யார்?........"
பவானி "அந்த ராம்மோஹன் தான் இந்து அம்மாளின் புத்திரன்"

பாமினி "அது சரிதான். ஆனால், நீங்கள் அந்த ராம்மோஹனுக்கும் எனக்கும் முக ஜாடையில் ஒற்றுமையிருப்பதாகக் கூறியதின் தாத்பரியமென்ன?"

பவானி "தாத்பரியமென்ன விருக்கிறது? அவனுக்கும் உனக்கும் முக ஜாடை ஒத்திருப்பதை நான் அறிந்ததும் அதை உனக்கும் தெரியப் படுத்தினேன். அதெல்லாமிருக்கட்டும், நீ ஏன் இன்னும் மருந்து சாப்பிடவில்லை? இந்தா, மருந்தைச் சாப்பிடு'' என்று கூறி மருந்தை அவுன்ஸ் கிளாஸில் ஊற்றிக் கொடுத்தாள். பாமினி அதை வாங்கிக் குடித்த பிறகு, "உனக்குத் தாயாரும், உடன் பிறந்த சகோதரனும்கூட இருப்பதை நீ அறியப்போகிறதுடன் அவர்களைக் கண்டு சந்தோஷிக்கவும் போகிறாய். அத்துடன் உனக்கறிமுகமான சேகர்கூட வரப்போகிறார். பாபம்! அவர் இப்பொழுது உன்னைக் காண கூச்சமடைவார்; இல்லையா பாமினி?....ஆ.... ஒரு விஷயம். நீ கூட அடிக்கடி 'சந்தர் எங்கே? அவரைக் காணவே இல்லையே?' என்று கேட்டாயல்லவா? சந்தருக்கு உடம்பு குணமில்லை. ஆனால், அவன் படுத்த படுக்கையாக இருக்கும்படி ஒன்று மில்லா விட்டாலும், அவன் ஏதோ ஒரு மாதிரியாகக் காணப்படுகிறான். நீ இன்று அவனையும் பார்க்கலாம்; மேலும் ஒருவருக்கும் புரியாமலிருக்கும் சில விஷயங்களையும் நீ தெரியப்படுத்த வேண்டியிருக்கும், ஆகையால், நீ தெம்புடனும் உத்ஸாகத்துடனும் தயாராக இருக்க வேண்டும்'' என்று கூறினாள்.

அச்சமயம் அவ்விடம் பாமினிக்கு வேண்டிய பத்தியமான ஆகாரங்களை எடுத்துக் கொண்டு வந்தாள் ஹேமாவதியம்மாள்.

அந்த அம்மாளைக் கண்டதும், அவ்விரு மடந்தையரின் சம்பாஷணையும் வேறு தினுசில் மாறிவிட்டது.

ஆனால் பாமினி, மலடிக்கு மகன் பிறந்தான் என்பது போல் தனக்குத் தாயாரும் உடன் பிறந்தவனும் இருக்கிறார்களென்றும், அவர்களைத் தான் பார்க்கப் போகிறதாயும் கூறிய விஷயம் உண்மையாக இருக்குமா வென்ற ஆச்சரியத்துடன் பவானியின் இஷ்டம் போல் நடந்து கொண்டாள்.

அத்தியாயம் 22

இரகசியம் வெளியாதல்

அன்று பிற்பகல் நான்கு மணிக்கு, சாந்தி நிகேதானத்தின் கீழ்க்கூடம் வெகு நேர்த்தியாக அலங்கரிக்கப் பட்டிருந்தது; ஓர் ஸோபாவில் டாக்டர் கோமனும், சேகரும் உட்கார்ந்திருந்தனர். அதற்கு எதிர்ப்புறம் போடப்பட்டிருந்த மற்றோர் ஸோபாவில் துப்பறியும் ஜயஸிங்கும், அவர் பக்கத்தில் சந்தரும் அமர்ந்திருந்தனர். அதற்கு வட புறமிருந்த மற்றோர் ஸோபாவில், நாகேந்

திரரும், ராம்மோஹனும் அமர்ந்திருக்க, சற்று ஒதுங்கியபடி நேருக்கு நேர் போடப்பட்டிருந்த இரண்டு சுழல் நாற்காலிகளில் நரேந்திரரும், பாமினியின் அம்மான் நிரஞ்சனும் அமர்ந்திருந்தார்கள்.

அக்கூடத்தை யொட்டி இருந்த மற்ருேர் ஹாலின், மூன்று வாயிற் படியிலும் தொங்க விடப்பட்டிருந்த பட்டுத் திரைச் சீலைகள் ஒதுங்கியபடி கட்டப்பட்டிருந்தது; அதன் உட்புறம், ஹேமாவதி, இந்து, சேகர் வீட்டுக்காரியான ஜானகி, பவானி, பாமினி, முதலியவர்கள் உட்கார்ந்திருந்தார்கள்.

அச்சமயம் ஜயஸிங் 'அம்மா பாமினி, நடந்து போன விஷயங்களனைத்தும் ஒரு விதமாய் நானறிந்தவனுக இருந்த போதிலும், நடந்த விஷயங்களை நடந்தபடி நீயே உன் வாயால் சொன்னுல், நான் ஊகித்தறிந்து கொண்ட விஷயங்கள் சரியான விஷயங்கள் தானுவென்பதைச் சந்தேகமறத் தெரிந்து கொள்வேன். ஆகையால் நீ உனக்குத் தெரிந்த விஷயங்களை ஒளியாமல் சொல்லவேண்டுமென்ருர்.

பாமினி "நீங்கள் கேட்கும் விஷயம் எனக்குத் தெரிந்ததாக இருந்து சொல்லக்கூடிய விஷயமானுல் நான் சொல்லத் தடையில்லை ?"

ஜெயஸிங் "நீ முதன் முதல் இங்கு வந்த பிறகு உனது தோழியாகிய நாகேந்திரர் மனைவி ஊருக்குச் சென்ற பிறகு, ஓர் தினம் இரவு நாகேந்திரர் குடிக்கும் பாலில் விஷம் கலந்திருப்பதாய் எவ்விதம் நீ அறிந்தாய் ?"

அதைக் கேட்டதும் பாமினிக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஏற்கெனவே பிரேதம் போல் வெளுத்துப் பொலிவற்று விளங்கிய சந்தரின் முகம் சடக்கென இன்னும் விகாரமாய் மாறிற்று. பாமினி சந்தரின் முகத்தைப் பார்த்தாள். அவள் மனம் மிகவும் சங்கடப்படுவதாய் அவளது முகம் காட்டிற்று. ஆனுல், சில வினுடிகளுக்குள் அவள் ஒரு தீர்மானத்திற்கு வந்தவள்போல் "அதைப் பற்றி எனக்கு எதுவும் விவரமாய்த் தெரியாதென்று முன்பே டாக்டரிடமும், நாகேந்திரரிடமும் கூறியிருக்கின்றேன். இப்பொழுதும் நான் அதையேதான் திருப்பிக் கூற வேண்டும். அன்று என் மனதில் திடீரென்று நாகேந்திரர் அந்தப் பாலைக் குடித்தால் அவருக்குக் கெடுதலுண்டாகும் என்று பட்டது. அதனுல் நான் அவரைப்பால் குடியாமல் தடுக்க ஓடினேன். ஆனுல், அதற்குள்ளேயே அவர் ஒருவாய் குடிப்பதைக் கண்டதும் அப்படியே அப்பாலைத் தட்டி விட்டேன்; அவ்வளவுதான் நான் சொல்லக் கூடியது ?" என்று அந்தப் பேச்சில் வெறுப்புற்றவள் போல் கூறினுள்.

அதைக் கேட்ட ஜயஸிங் புன்னகையுடன் சந்தர் முகத்தை நோக்கினர். சந்தர் கண்களில் கண்ணீர் ததும்ப, நிலத்தை நோக்கிய படி அவன் தன்னைச் சமாளித்துக் கொள்ளுவதை அவர் உணர்ந்தார்.

சந்தர் "ஜெயஸிங், பாமினியின் பெருந்தன்மைக்கு நான் பாத்திரமானவனேயல்ல. ஆ, அவள் எனது மானத்தைக் காக்கும் பொருட்டு, அநேக கஷ்டங்களையும் சகித்து, இன்னமும் எனக்கு நன்மையையே நினைத்து, எவ்வளவு சாதுரியமாய் மறைத்து வார்த்தையாடுகிருள்! ஆனல் நான் இனி எனது செய்கையை மறைத்துத் துன்புற நினைக்கவில்லை. நான் செய்த குற்றங்களுக்குப் பிறர் எனக்கு தண்டனை விதிக்காவிட்டாலும், நான் செய்த குற்றத்தின் விபரீத விளைவுகளை அறிந்ததிலிருந்து, எனது மனச் சாட்சியே சதா சர்வகாலமும் இடித்திடித்து வைத்து, குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்குமென்பதற்கு மேல், வாள் கொண்டறுப்பது போல் என்னைச் சித்திரவதைக்கு மேல் துன்பப் படுத்தி விட்டது. நான் பிறர் சௌகரியத்தைச் சிறிதும் சிந்தியாமல், எனது சுகத்தையே பிரதான மாய் நினைத்து ஆழ்ந்து யோசியாமல், மூர்க்கத்துடன் தோன்றிய ஓர் உணர்ச்சியின் வயப்பட்டு, புத்தியிழந்து ஒரு குற்றத்திற்கு இரண்டுகுற்றம் செய்து விட்டேன். நான் எனது செய்கை முற்றும் வெளியிட்டால் தான் பாமினியின் பெருந்தன்மையின் அளவும் நன்கு புலப்படும். அவளது பெருங்குணத்தால் என்னிடமிருந்த துர்க்குணங்களும் இப்பொழுது அகன்று விட்டன. நான் செய்த அந்த அடாத செய்கைகளுக்காக இந்த இருபது நாட்களாய் நான் படும் வேதனை எல்லையற்றது.......சரி, முதலில் நாகேந்திரர் பாலில் விஷம் கலக்கப்பட்டது யாரால்? என்பதைச் சொல்லுகிறேன்" என்று தான் பாமினியை நேசித்ததும், அதனல் நாகேந்திரர் மேல் குரோதங் கொண்டதும், தனக்கு இடஞ்சலாகவுள்ள அவனை சித்த ஸ்வாதீன மற்றவனய்ச் செய்து விட நினைத்து, ஓர் டாக்டரிடமிருந்து ரூ 200 கொடுத்து ஓர் பாஷாணம் வாங்கிக்கொண்டு வந்து, அவனுக்கு வைக்கப்பட்டிருந்த பாலில் தான் நினைத்த அளவு கலந்து விட்டு, பாமினியின் அறைக்குச் சென்று அவளைப் பலாத்கரிக்க நினைத்ததும், அதற்குப் பதிலாய் பாமினியின் சமயோசித சாமர்த்தியச் செய்கையால் தானே கட்டுண்டு கிடந்ததும், பிறகு வெகு நேரம் பொறுத்து அவளால் விடுவிக்கப்பட்டதும், அவளிடம் உண்டான அச்சத்தால் சில நாள் பேசாமலிருந்து, பிறகு ஒரு துஷ்டனின் சகவாசத்தால் மறுபடியும் புத்தி பேதிக்கப்பட்டு, அந்த துஷ்டனின் சகாயத்தால் பாமினியைக் கொண்டு போய் அவன் வீட்டில் அடைத்து வைத்து, தனக்கு இசையும்படி வற்புறுத்தியதும், மறுதினம் அவள் மாயமாய் மறைந்து விட்டதைக் கண்டு தானடைந்த துயரத்தையும், கலக்கத்தையும் விவரமாகப் புகன்றான்.

வாழ்வுத் தோணி

(ஆரியூர். வ. பதுமநாபப் பிள்ளை)

தலை நிமிர்ந்து உயர்ந்து நிற்கும் நீல மலையின் மேலே, இருண்டு கவிந்து பயங்கரமாகக் குமுறிக் கொண்டிருக்கும் கருமுகில்களிடையிலே, 'பளீர்' 'பளீர்' என்று பேரொளி வீசும் மின்னல்கள் அடிக்கடி தோன்றித் தோன்றி' மறைகின்றன. அக் கருமுகில்கள் சொரியும் மழைத் தாரைகள், 'ஜோ!' என்ற பேரிரைச்சலுடன் வெகு வேகமாக நிலத்தை நோக்கி விழுந்துக் கொண்டிருக்கின்றன. மலையடிவாரத்தில் அமைந்துள்ள காட்டருவியிலே, செக்கச் செவேலென்ற சிவந்த புதுவெள்ளம் 'ஹோ!' என்ற கோஷத்துடன் நுரைத்துச் சுழித்துப் பொங்கிப் பரந்து பெருகி ஓடிக் கொண்டிருக்கிறது. அந்தக் காட்டருவியின் பெரு வெள்ளம், எத்தனை கட்டைகளை—எத்தனை மட்டைகளை—எத்தனை மரங்களை—எத்தனை செடி கொடிகளை—எத்தனை பெரும் பெருங் கற்களைத் தன்னோடு இழுத்துக் கொண்டு எவ்வளவு பயங்கரமாகச் சுழித்து நுரைத்துச் சுருண்டு பரந்து புரண்டு ஓடிக்கொண்டிருக்கிறது! மேலே, இருண்டு குமுறும் வானத்திலே கிடுகிடுவென்று இடிக்கும் இடிகளில் பயங்கரமான கோர கோஷம்! காட்டிலோ சுழன்று சுழன்றடிக்கும் சூறாவளியினால் மடமடவென்று முறிந்து விழுந்துகொண்டிருக்கும் மரங்களின் பேரொலி! ஆங்காங்குள்ள மேடுகளினின்றும் பள்ளங்களில் தடதடவென்று விழுந்து பரந்து சுழித்தோடும் காட்டருவியின் பெருமுழக்கம்! அவ்வளவு பேரொலிகளினிடையிலே—அந்தப் பயங்கரக் காட்சிகளினிடையிலே—ஒரு அற்புதக் காட்சி! அந்தப் பெரு மழையிலே—அந்தக் காட்டருவியின் பயங்கர வெள்ளப் பெருக்கிலே, ஒரு ஓடக்காரன் தனது தோணியை மிக மிகச் சாமர்த்தியமாகச் செலுத்திக் கொண்டிருக்கிறான்! கரிய வானிலே குமுறிக் கொண்டிருக்கும் இடிகளின் பயங்கர முழக்கமோ, வழியில் முறிந்து விழுந்துகொண்டிருக்கும் மரங்களின் பேரொலியோ சுழித்து நுரைத்துச் சுருண்டு குதித்தோடும் காட்டருவியின் பயங்கரக் காட்சிகளோ, அத்தோணிக்காரனின் வீரத்துணிவை-மனஉறுதியை-சிறிதும் கலங்கச் செய்விப்பனவாகக் காணோம். தனது கைகளில் பற்றியிருக்கும் படகு தள்ளும் துடுப்பிலும், வெள்ளப் பெருக்கின் போக்கிலுமே தனது முழுக் கவனத்தையும் செலுத்திக் கொண்டிருக்கும் அவன், அந்த பயங்கரமான காட்டருவியின் வெள்ளப் பெருக்கிலே தனது தோணியை மிக மிக எச்சரிக்கையாகச் செலுத்திக் கொண்டிருக்கிறான்.

அக் காட்சியை, கானகத்தில் தவம் செய்து கொண்டிருக்கும் ஒரு துறவி உற்று நோக்குகிறார். அந்த பயங்கரக் காட்சி, அந்தத் துறவியின் உள்ளத்திற்குள் புகுந்துகொண்டு, எத்தனையோ உணர்ச்சிகளைத் தூண்டி எழுப்பி விட்டு விடுகிறது. எனவே, மன அமைதியைப் பெற விரும்பிய அத்துறவி, தியானத்திலே அமர்கிறார். அந்த நிஷ்டையிலே, அவரது அகக் கண்ணெதிரிலே, அவர் காட்டில் கண்ட பயங்கரக் காட்சி மீண்டும் தோன்றுகிறது. இருண்டு குமுறும் கருமுகில்கள் சொரியும் பெருமழையும், 'பளீர்'

'பளீர்' என்று மின்னி மின்னி மறையும் பேரொளிக் கதிர்களாகிய மின்னல் களும், சுருண்டு புரண்டு கற்பாறைகளுக்கிடையே சுழித்து நுரைத்தோடும் காட்டருவி வெள்ளமும், அவ் வெள்ளப் பெருக்கினிடையே தோணிக்காரன் மிக மிக எச்சரிக்கையுடன் செலுத்திக் கொண்டிருக்கும் தோணியும், அவரு டைய மனக் கண் முன் மீண்டும் தோன்றுகின்றன. அவ் வேளையிலே, அவ ரது உள்ளத்திலே, 'மனிதன், உலகமாகிய வெள்ளத்தில் தனது வாழ்வாகிய தோணியைச் செலுத்துவதும் அத்தகைய அற்புதச் சாகசச் செயல்தானே!' என்பதொரு எண்ணம், அவரது உள்ளத்தில் தோன்றுகிறது. அத்தகைய தொரு தோணியைப் போன்றதுதான் மனிதனின் வாழ்க்கை என்பதையும், அதைத் திறமையாக நடத்தும் சக்தி தான் வாழ்க்கையை வெற்றிகரமாக நடத் தும் முறை என்பதையும் அவர், கண்டு கொண்டு விடுகிருர். உடனே, 'உலக வாழ்க்கையாகிய பாதையிலே, மனித வாழ்வின் உன்னத லட்சியத்தை விரை விலும் நிச்சயமாகவும் அடைவிக்கக்கூடிய சிறந்த வழியைக் கண்டு பிடித்து விட்டேன்!'—என்று புள்ளி மானைப் போல் துள்ளி எழுந்த அவர், அவ்வின்ப வெறியினுலே ஆனந்தத் தாண்டவம் ஆடத் தொடங்கி விடுகிருர்.

ஒரு நாள், ஒரு பழந் தமிழ்ப் புலவர், தனது மனத் தேரைச் சிந்தனை உலகில் செலுத்தித் திரிந்து கொண்டிருந்தபோது, அக்காட்டருவி வெள்ளப் பெருக்கின் காட்சியையும், அப் பெருக்கினிடையே தனது தோணியை மிகுந்த துணிவுடன் செலுத்திக் கொண்டிருக்கும் தோணிக்காரனையும் வனத்தில் ஆனந்தத் தாண்டவமாடிக் கொண்டிருக்கும் முனிவனையும் கண்டுவிடுகிருர். அந்த மூன்று வகைக் காட்சிகளும் அவரது உள்ளம் முழுவதையும் கவர்ந்து அவருடைய வாழ்க்கை முறையை அவருக்கு நினைவூட்டி பற்பல அற்புத உண்மை களை அவருக்கு உணர்த்தத் தொடங்கி விடுகின்றன. அதன் பயனுக, அவரது வாயினின்றும் பின்வரும் அற்புதச் சொற் சித்திரம் பிறக்கிறது:—

"யாதும் ஊரே! யாவரும் கேளிர்!
தீதும் நன்றும் பிறர் தர வாரா;
நோதலும் தணிதலும் அவற்றோர் அன்ன;
சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்,
இனி(து) என மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்,
இன்னு(து) என்றலும் இலமே; மின்னெடு
வானம் தண் துளி தலைஇ ஆனுது,
கல் பொரு(து) இரங்கும் மல்லல் பேர் யாற்று
நீர் வழிப் படூஉம் புணை போல், ஆருயிர்
முறை வழிப் படூஉம் என்பது, திறவோர்
காட்சியில் தெளிந்தனம்; ஆகலின், மாட்சியில்
பெரியோரை வியத்தலும் இலமே;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே!"—

—புற நானூறு.

மனிதனது வாழ்வு முறைக்குத் தனிப் பெருங் காரணமாக நிற்கும் 'விதி' தான்—காரண காரியங்களை அமைக்கும் 'விதி' தான்—காட்டருவி வெள்ளம். அத்தகைய வெள்ளம் திடீரென்று பெருக்கெடுத்து ஓடத் தொட

ங்குவதற்கு, எத்தனையோ காரணங்கள் உண்டு. மலையின் மேல் இருண்டு குமுறும் மேகங்கள், மழையைச் சொரிய வேண்டும்; அம் மேகங்கள் இருண்டு மழை பொழிய, கருங் கடலிலிருந்து கிளம்பிய நீராவி திரண்டு கூட வேண்டும். நீராவி திரண்டு கூட, பருவக் காற்று வீசவேண்டும். இன்னும் எத்தனையோ காரணங்கள் ஒருங்கு கூடினால்தான், கருமுகில்கள் திரண்டு மழையைச் சொரிகின்றன. அக்காரணங்களில் மிகப் பல, சாதாரண அறிவுடைய ஒருவனுக்குச் சிறிதும் விளங்காமலிருக்கலாம். அதுபோல், விதியின் விளையாட்டுகளுக்கு உரியனவாக அமையும் விசித்திரக் காரணங்கள் என்னென்ன என்பது, நமது சாதாரணச் சிற்றறிவுக்குச் சற்றும் விளங்காமலிருக்கக்கூடும். ஆனால் தகுந்த காரணங்கள் யாவும் ஒருங்கு கூடினாலன்றி எப்படி மழை பொழிவதில்லையோ, அப்படியே தகுந்த வினைகள் ஒருங்கு சேர்ந்து திரண்டிருந்தாலன்றி, விதியின் விசித்திர விளையாட்டுகளும் நிகழ்வதில்லை.

தீமையும், நன்மையும் மற்றவர்களால் விளைவிக்கப்படுவன அல்ல. அவரவர் செய்யும் வினைகளுக்குத் தகுந்த வண்ணமே, அவ்விரண்டும் அமைகின்றன. ஒருவன் துன்புறுவதற்கும், இன்புறுவதற்கும் உரிய மூல காரணம், அவன் செய்யும் செய்கையைப் பொறுத்ததாகவே இருக்கின்றது. தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் ஒருவன்—சுயநலச் சுகானுபவச் சுய இச்சைப் பித்துகள் அனைத்தையும் துறந்து, பரோபகாரப் பணி செய்வதிலேயே ஆர்வம் மிகுந்து நிற்கும் ஒருவன்—'என் கடன் பணி செய்து கிடப்பதே!'—எனும் உன்னத லட்சியம் ஒன்றையே தனது வாழ்க்கையின் நோக்கமாகக் கொண்ட ஒருவன், வாழ்க்கைப்பாதையில் திடசங்கற்பத்துடனும் தீவிர உற்சாகத்துடனும் நடந்து சென்று கொண்டிருக்கும்போது, தன் முன் குறுக்கிடும் சோதனைகளும் துன்பங்களும் எவ்வளவுதான் வலியனவாக இருந்தாலும், அவன் அவற்றைக் கண்டு சிறிதும் அஞ்சுவதேயில்லை. எத்தகைய கொடிய சோதனை எதிர்ப்பட்டாலும், அவனது மனம் 'அதுவும் ஒரு நன்மைக்கே' என்று கருதிச் சிறிதும் கலங்காமல் பெரிதும் துணிந்தே நிற்கிறது. அதன் பயனாக, அத்தகைய வீரத்தியாகி, 'இன்பத்தை இனிதெனவும்—துன்பம்—இனிதில்லை என்றும் அவன் எண்ணுவதில்லை'. சோதனைகளைக் கண்டு அஞ்சி அயர்ந்து, தளர்ந்து, நடுங்கி, வருந்தி நிற்பவன், தனது வாழ்வுத் தோணியை உலகவெள்ளப் பெருக்கினிடையே திறமையாகச் செலுத்திச் சமாளிக்கச் சக்தியின்றித் திகைத்துக் கலங்கித் தவிக்கும் ஒரு பெருங் கோழையே ஆவான்.

மரணம், நூதனமானதன்று; பிறப்பு நேர்ந்தபின், இறப்பு நிச்சயம். நமக்கு முன்னால் எத்தனை கோடி மனிதரோ மடிந்து உறைந்து விட்டனர்; இப்போதும், நம் கண்ணெதிரிலும் இறந்து கொண்டிருக்கும் எண்ணிறந்தோரைக் கண்ணாரக் கண்டு கொண்டே வருகிறோம். இம் மண்ணுலக வாழ்விலே, ஒருவன் எத்தனை இன்பங்களை அனுபவித்தாலும், அவற்றுள் என்றும் நிலைத்து நிற்கக்கூடியது எதுவுமில்லை. உண்மை அறிவைப் பற்றிய சிந்தனை—மனோ சாந்தி—ஆத்மானந்தம்—இவையே ஒருவனது ஆன்மாவுக்கு நிலையான உண்மை இன்பத்தை அளிக்கக்கூடியனவாகும். எனவே ஏனைய அற்ப சுகானுபவங்களின் பொய்ம்மையை—நிலையாமையை—உள்ளபடி உணர்ந்த உண்மை ஞானி ஒருவன், வாழ்க்கையை இன்ப மயமானதென்று எண்ணிக்கொண்டு களிக் கூத்தாடுவதில்லை; அம் மகிழ்ச்சிப் பெருக்கினால், அவன் தான் செய்யவேண்டிய கடமைகளுள் எதையும் மறந்து விடுவதில்லை.

உண்மை ஞானி ஒருவன், தான் பரோபகாரப் பணி செய்து வாழ்வதற்கு உரிய இடமாக இருக்கிறதென்ற ஒரு காரணத்தினலேயே, இவ்வுலக வாழ்க்கையை விரும்புகிறான். அதைப் பொறுத்தவளவில், இவ்வுலக வாழ்வு அவனுக்கு ஓரளவு ஆறுதல் அளிக்கக்கூடியதாக இருக்கிறதென்றே கூறவேண்டும். ஆதலின், வாழ்க்கைப் பாதையிலே, எத்தனை கொடிய சோதனைகள் எதிர்ப்பட்டாலும், அவனது மனம் சிறிதும் கலங்காமல் உறுதி மிகுந்து பரோபகாரப் பணி செய்யும் ஆர்வமே மிகுந்து துணிந்து நிற்பதால், தன் முன் எதிர்ப்படும் சோதனைகளையும் துன்பங்களையும் கண்டு, ‘உலக வாழ்க்கை துன்ப மயமானது; கொடுமைகள் மிகுந்தது’—என்று அவன் தீர்மானித்து விடுவதுமில்லை. பரோபகாரப் பணி செய்து வாழ்வது ஒன்றையே தனக்கு உரிய தனிப்பெரும் இன்ப வாழ்வாகக் கருதும் ஒருவன், அத்தகைய பணி செய்வதற்கு உரிய இடமாக இருக்கும் இவ்வுலக வாழ்க்கையை வெறுத்து இகழத் துணிவது எங்ஙனம்?

‘பளீர்’ ‘பளீர்’—என்று ஒளி மிகுந்த மின்னல்கள் மின்னிக் கொண்டிருக்கும் கரிய வானத்திலிருந்து நிலத்தை நோக்கிக் கீழே பொழிந்து கொண்டிருக்கும் பெரு மழையிலே எதிர்ப்படும் கருங்கற்பாறைகளின் மீது மோதி அலைந்து சுருண்டு சுழித்து நுரைத்துப் பரந்து பயங்கரமான பெரு முழக்கத்துடன் ஓடிக் கொண்டிருக்கும் வளம் மிகுந்த பெரிய நதியின் வெள்ளப் பெருக்கிலே அமிழ்ந்து விடாமல் செல்லும் தோணியைப் போலவே, மனிதனாகிய மாலுமியும், தனது வாழ்வாகிய தோணியை, உலகமாகிய வெள்ளப் பெருக்கின் நடுவிலே, மின்னி மின்னி மறையும் மின்னல்களைப் போல் தோன்றித் தோன்றி மறையும் துன்பங்கள்—கிடுகிடுவென்று இடிக்கும் இடிகளைப் போல், நெஞ்சத்தை நடு நடுங்கச் செய்விக்கும் வஞ்சகர்களின் கொடிய சூழ்ச்சிகள்—இடையறாது பொழியும் பெருமழையைப் போல், தொடர்ந்து விளையும் துன்பங்கள்—உண்மை அறிவை மயக்கிக் கலக்கி இழுக்கும் மாயப் பொய்ச் சுழிகள்—தான் விரும்பிய வாறெல்லாம் மனதை இழுத்துச் செல்ல முயலும் மாய மோகப் பேராசை வெள்ளப் பெருக்கு—முதலிய பயங்கரமான அபாயங்கள் பலவற்றையும் கடந்து ஒவ்வொரு கணத்திலும் தனது மனதை எச்சரித்து அடக்கி வசப்படுத்தி மிகுந்த ஜாக்கிரதையுடன் செலுத்தவேண்டியவனாக இருக்கிறான்.

“அப் பேருண்மையை, சிறந்த ஞான வீரர் கண்டு உணர்ந்ததை அறிந்து, உண்மை தெரிந்து கொண்டோம்! அவ் வுணர்ச்சி, எமது உள்ளத்தில் ஊடுருவிப் பதிந்து இரண்டறக் கலந்து போய்விட்டது!”— என்று மகிழ்ச்சி பொங்கித் ததும்பும் நெஞ்சுடன் பாடுகிறார் அப் பழந் தமிழ்ப் புலவர்.

மண்ணுலக வாழ்க்கையாகிய வெள்ளப் பெருக்கிலே சென்று கொண்டிருக்கும் எண்ணிறந்த தோணிகளிலே, சில தோணிகள் எல்லா இடர்களையும் கடந்து கரையை நெருங்கிவிட்டன. அவற்றை வெற்றிகரமாக செலுத்திச் சென்று கரையை நெருங்கிவிட்ட வீர மாலுமிகளை, உலகம் ‘பெரியவர்கள்’ என்று பெரிதும் வியந்து போற்றுகிறது. கரையை நெருங்குவதற்கு முன்பு, அப் பெரியவர்களுங் கூட, எத்தனையோ சோதனைகளையும், சுழிகளையம், விபத்துகளையும் கடந்து தான் சென்றிருக்கின்றனர்; அவ்வுண்மையை உணர்ந்தவர்கள், அத்தகைய பெரியோரைக் கண்டு வியந்து பேசிக் கொண்டே தாங்கள்

சும்மா இருந்து விடுவதில்லை; அவர்கள், தங்களுக்கு முன்பு வழி காட்டிச் சென்றிருக்கும் பெரியவர்களைப் பின்பற்றி, தங்களது வாழ்வுத் தோணியையும் உலக வெள்ளப் பெருக்கினிடையே மிகுந்த எச்சரிக்கையாகவே செலுத்திச் செல்ல முயற்சிக்கின்றனர்; அப்போது, அவர்கள் தங்களுக்குப் பின்னால், தங்களைப் பின்பற்றி வந்து கொண்டிருப்பவர்களைக் கண்டு, அவர்களைச் 'சிறியோர்' என்று அலக்ஷ்யமாகக் கருதி அவமதிப்பதுமில்லை.

அத்தகைய பேருண்மையை நன்கு உணர்ந்து கொண்ட அந்தப் பழந் தமிழ்ப் புலவர்—சகோதர தர்மத்தின் பெருமையை இனிது தெளிர்ந்து உணர்ந்த அந்தக் கவிஞர், பரந்த உலகத்தைக் குளிர்ந்த நோக்கமாக நோக்கி, "யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!" ("எல்லா ஊர்களும் எங்கள் ஊர்களே! மனித இனத்தினர் அனைவரும் எங்கள் உறவினர் தான்!")—என்று மனம் மகிழ்ந்து மார் தட்டிப் பேசித் தலை நிமிர்ந்து நிற்கிறார். அத்தகைய வீரக் கவிஞரின் உள்ளத்திலே, வாழ்க்கையைப் பற்றிய கவலையேனும், வெறுப்பேனும், மரண பயமேனும் சிறிதளவும் தோன்றவேயில்லை. அன்று அக்கவிஞர் தமது அகக் கண்ணால் கண்டு தெளிந்து தீட்டிக் காட்டிய அந்த அற்புதச் சொற் சித்திரம், இன்றும் தற்காலத் தமிழர்களுக்கு எவ்வளவு சிறந்த அற்புத உண்மைகளை இனிது உணர்த்தி நிற்பதாக ஒளிர்கிறது!

மகாத்மாவின் அநுக்கிரகம்.

"பும்ஸத்து, கர்ஜூரெக்காய்" "அமிர்ததிலா"

நபும்ஸகத்தினால் பிராணத்தியாகம் செய்துகொள்ள நினைத்தவர்கள் இந்த இரண்டு ஔஷதங்களினால் மறுபடியும், புனர்ஜன்மம் எடுத்து சுகம் அனுபவிக்கிறார்கள்.

இந்திரியத்தை கட்டுப்படுத்தி இந்திரியத்திலிருக்கும் உஷ்ணத்தை எடுத்து யௌவன விருத்தி செய்வதில் இந்த மருந்து அபரிமிதமான குணமுடையது, மணிக் கணக்காய் ஸ்திரீகளுடன் சம்போகம் செய்யும் வலுவை உண்டுபண்ணும். "அமிர்த திலா" என்னும், மருந்தால் நரம்புகளுக்கு இருக்கும் சக்தியை அதிகப்படுத்தும்.

டாம்பீக பிரகடனங்களை நம்பி மோசம் போகாதீர்கள். ஒரு தரம் உபயோகித்துப் பார்க்கவும்.

22–காய்களுடன் டின் 1–க்கு 11–நாளைக்கும் அமிர்ததிலா ஸீஸாவுடன் விலை ரூ. 6—0—0 போஸ்டேஜ் 0—10—0

☞ ராஜவைத்திய H. M. கமாலுத்தீன்,
கார்வேடிநகரம் போஸ்டு, (சித்தூர் ஜில்லா.)

பாப்பா பகுதி:—

கமலா

ஏ. வேங்கடராமன்

கற்கோட்டை என்பது ஒரு சிறியகிராமம். அதில் வாசுதேவன் என்ற ஒரு ஏழை வசித்து வந்தான். அவனுக்குப் பசுபதி என்றொரு பிள்ளை இருந்தான். அவ்வேழை பிரதிதினமும் பக்கத்திலுள்ள காட்டிற்குச் சென்று விறகு சேகரித்து வருவான். பிறகு அதை நகரத்திற்கு எடுத்துச் சென்று விற்று அதன் மூலம் ஜீவனம் நடத்திக்கொண்டு வந்தான்.

ஒருநாள் திடீரென்று வாசுதேவன் கடுஞ் ஜுரத்தினல் பீடிக்கப்பட்டான். அந்த ஏழைக்கு மருந்து கொடுப்பவர் யார்? பசுபதியே, தகப்பனுருக்காக அருகில் இருந்த பட்டணத்திற்குச் சென்று ஒரு இலவச வைத்திய சாலையினின்று மருந்து வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தான். என்ன மருந்து சாப்பிட்ட போதிலும் 'தாகம், தாகம்' என்று நாவின் வறட்சியைத் தாளமாட்டாமல் சொல்லுவான்.

இம்மாதிரியே சில நாட்கள் சென்றன. ஓர்தினம் வீட்டில் கஞ்சிக்கூட வழியில்லாததைக் கண்ட பசுபதி தன் தகப்பனுரைப் போலவே விறகு வெட்டிக் கொண்டு வருவதற்காகக் காட்டிற்குச் சென்றுன். அவன் அதுவரையில் அக்காட்டிற்கு வந்தது கிடையாது. ஆதலால் ரொம்பவும் கஷ்டப்பட்டு காட்டினுள் சென்று விறகு வெட்டிக் கொண்டிருந்தான். அப்பொழுது அவனுடைய கண்களுக்கு தூரத்தில் ஏதோ பளபளவென்று மின்னுவது தெரிந்தது. உடனே, விறகு வெட்டுவதற்காகத் தன் கையில் வைத்துக் கொண்டிருந்த கோடாலியை அங்கேயே ஒரு மரத்தடியில் போட்டு விட்டு தூரத்தில் மின்னிய வஸ்து என்னவென்றறிய ஓடினுன். அங்கு அவன் கண்ட வஸ்து என்ன? நவரத்தினங்கள் இழைக்கப் பட்ட ஒரு அழகிய மோதிரம். அதன் பிரகாசம் அவனுடைய கண்களை மழுங்கச் செய்தது.

அதைக் கண்டதும் அவனையுமறியாமல், அதைத் தன்வீட்டுக்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது. ஆனுலும் பிறர் பொருளை எடுத்துச் செல்லலாமா என்ற சந்தேகம் தோன்றியது. கடைசியாக அதை எடுத்துச் சென்று தன் பிதாவிடம் கொடுத்து, அவர் அதை என்ன செய்யச் சொல்லுகிருரோ, அம்மாதிரியே தான் செய்வதெனத் தீர்மானித்து அதை ஒரு துணியில் நன்ருய்ச் சுற்றி மடியில் வைத்துக் கொண்டு, நேராக வீட்டை நோக்கி வேகமாய் நடந்தான்,

வழியில் ஒரு ஆலமரத்தடியில் மூன்று அழகிய மங்கையர்கள் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய அழகிய முகம் எக்காரணத்தாலோ சோபையை யிழந்து சோகமுற்றிருப்பது போலிருந்தது. கணையாழியுடன் வந்து கொண்டிருந்த பசுபதி இவர் களைப் பார்த்ததும், ஒருவேளை தான் எடுத்துச்செல்லும் மோதிரம் இவர்களுடையதாயிருக்கலாமோ யென்று யோசித்தான். எதற்கும் அவர்களைக் கேட்டுப் பார்ப்போம், என்று எண்ணி அவர்களிடம் சென்றான்.

யாரோ ஒரு வாலிபன் தங்களை நோக்கி வருவதைக் கண்ட அந்த மங்கையர்கள் "பையா! நீ யார்? உன்பெயரன்ன? இக்கான கத்திற்கு நீ எதற்காகத் தனித்து வந்தாய்?" என்று அன்புடன் வின வினார்கள்.

பசுபதி, அவர்களிடம் தன்னுடைய வரலாற்றை தான் அக் காட்டில் விறகு வெட்டவந்த வரையிலும் கூறிவிட்டு, "நீங்கள் யார்? உங்கள் சரித்திரம் என்ன? எதையோ இழந்து துக்கப்படுவதுபோல் எனக்குத் தோன்றுகிறது. என்னுடைய எண்ணம் சரிதானா?" என்று கேட்டான்.

உடனே அம்மூவரும் ஆச்சர்யத்துடன் "பசுபதி! உன்னுடைய சூக்ஷ்மபுத்தியே புத்தி! உன் எண்ணம் சரியானதே. அதை நாங்கள் மெச்சுகிறோம். நாங்கள்கந்தர்வ ஸ்திரீகள்; எங்களுடைய விவாஹத் தின் போது எங்கள்மூவருக்கும் பரிசாக அளிக்கப்பட்ட ஒரு அழ கிய நவரத்தின மோதிரம் இக்காட்டில் எங்கேயோ தொலைந்து போய் விட்டது. அது ஒரு அபூர்வ மோதிரம். அது இழந்து போய்விட்டதே எங்கள் முகச்சோர்வுக்குக் காரணம். ஒருவேளை நீ அதை எங்கே யாகிலும் கண்டாயா?" என்று ஆவலுடன் கேட்டார்கள்.

வாசுதேவன் அவர்கள் கூறியதைக் கேட்டதும் தன் மடியில் சுற்றி வைத்திருந்த துணியை அவிழ்த்து, அதில் இருந்த மோதிரத்தை அவர்களிடம் கொடுத்து, அது தனக்குக் கிடைத்த வரலாற்றைக் கூறினான்.

"பசுபதி! உன்னை நாங்கள் எவ்விதம் புகழ்வது? உன் உயரிய உத்தம குணம் எங்களுக்கு மகிழ்ச்சியை யளிக்கிறது. நீ எங்களுக் குச் செய்த இப் பேருதவிக்கு ஈடாக உனக்கு ஏதேனும் அளிக்க விரும்புகிறோம்; உனக்கு வேண்டுவதென்ன?" என்று கேட்டார் கள்.

"தேவிகாள்! எனக்கு என்னவேண்டும்? உங்கள் பூர்ண ஆசீர்வாத மொன்றே போதுமானது. இருந்தாலும் என் பிதா

எப்பொழுதும் கொடிய தாகத்தினால் வருந்துகிறார். அவருடைய கடுமையான ஜுரத்தை நிவர்த்தி செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்" என்று ரொம்பவும் வணக்கமாக மறுமொழி யளித்தான்.

அந்த க்ஷணமே அந்த ஸ்திரிகள் ஒரு பழத்தை சிருஷ்டித்து அவனிடம் கொடுத்து "இதை உன் தகப்பனாருக்குக் கொடு. அவர் குணமடைவார்" என்றார்கள்.

அதைப் பெற்றுக்கொண்ட பசுபதி "இதன் பெயர் என்ன?" என்று வினவினான்.

"எங்கள் மூவரில் ஒருத்தியான 'கனகா' என்பவளின் முதலெழுத்தையும், மற்றொருத்தியான 'சுமதி' என்ற பெயரின் நடு எழுத்தையும், என்னுடைய பெயரான 'விமலா'வின் கடைசி எழுத்தையும் எடுத்து ஒன்று சேர்த்து, எங்கள் ஞாபகார்த்தமாய் 'கமலா' என்று இப்பழத்திற்குப் பெயரிட்டு எடுத்துச்செல். உனக்கு கல்விச் செல்வமும், பொருட் செல்வமும், நற்குண நற்செய்கைகளும் மேலும் மேலும் அபிவிருத்தியடையட்டும்." என்று ஆசீர்வதித்து மாயமாய் மறைந்து விட்டார்கள்.

பசுபதி அளவு கடந்த சந்தோஷத்துடன், அவர்கள் மறைந்த திக்கை நோக்கி நமஸ்காரம் செய்து விட்டு பழத்தை யெடுத்துக் கொண்டு தன் வீட்டிற்குச் சென்றான், தன் பெற்றோர்களிடம் அப்பழம் தனக்குக் கிடைத்த விபரத்தை விரிவாய்க் கூறியபின் தகப்பனாரிடம் அதைக் கொடுத்து சாப்பிடும்படி சொன்னான். பழத்தைச் சாப்பிட்டதும் வாசுதேவனுடைய நாவறட்சியும், ஜுரமும் நீங்கிக் குணமடைந்தான்.

பூரண சௌக்கியமடைந்த வாசுதேவன், பசுபதி, அவனுடைய தாயார் மூவரும் கடவுளின் அதியற்புதச் செயலைக் குறித்து பஜனை செய்து கொண்டாடினார்கள்.

குழந்தைகளே! இதுதான் கமலாவின் வரலாறு. இக்கதை முழுவதையும் வாசிப்பதற்கு முன்னால், இது கமலா வென்ற ஒரு பெண்ணின் கதை என்று நினைத்தீர்களல்லவா? அம்மாதிரி நினைத்து ஏமாற வேண்டுமென்றே "கமலாப்பழம்" என்று தலைப்பு கொடுக்காமல் "கமலா" என்று தலைப்புக் கொடுத்தேன்.

நீலா

[பந்துலு]

அதிவேகமாய் வந்துகொண்டிருந்த ராதுவின் சைகிள் அந்த வீட்டின் எதிரில் அவனை யறியாமலே திடீரென்று நின்றது. அவன் முகம் ஒளிகொண்டு வீசியது. அப்பொழுது அவனுடைய நினைவு, அவனுக்கில்லை என்றே சொல்லலாம். அவன் மனதில் பெரிய ஆனந்தமொன்று உண்டாயிற்று. இவையெல்லாம் ஐந்து நிமிஷங்களில் தோன்றி மறைந்தன.

அக்கம் பக்கம் திரும்பிப் பார்த்தான். யாரையும் காணவில்லை. அவனுடைய அன்பு நிறைந்த பார்வை அவ் வீட்டின் கேட்டிற்கருகில் நின்றிருந்த பெண்ணின்மேல் விழுந்தது. விழுந்ததுதான் தாமதம். அவளுடைய தலை சற்று குனிந்து கொண்டது. அவளது குனிந்த முகத்திலிருந்து எழுந்த கடைக்கண் பார்வை ராதுவை அவளருகில் இழுத்துவிடும் போலிருந்தது.

அதே சமயம் தெருவின் கோடியில் யாரோ வரும் சத்தம் ராதுவின் காதுகளில் மோதி அவன் விஷமம் நிறைந்த பார்வையின் நோக்கைக் கொஞ்சம் தடை செய்தது. உடனே அவன் தன் சைகிளை ஒழுங்கு படுத்தி நிறுத்திக்கொண்டு மெதுவாக அவ்விடத்தை விட்டு நகர ஆரம்பித்தான். ஆனால் இரண்டு பேரின் கண்களும் ஒன்றையொன்று சற்று நேரம் காதலில் கலந்தவாறே நின்றன.

பாவம்! என்ன செய்வாள் நீலா? "நீலா! நீலா!!" யென்று உள்ளிருந்து அவள் தாயார் கத்திய கத்தல் அவளை அங்கு கொஞ்சமும் நிற்கச் செய்யவில்லை. மறுபடியும், "போயிட்டயோ இல்லையோ தெருவுக்கு" என்ற சிம்ம கர்ஜனைப் போன்ற வார்த்தைகள் முற்றும் அவளை உள்ளே துரத்திவிட்டது.

நீலாவின் உருவத்தையே நினைத்துக்கொண்டு போன ராது, தன் சைகிளைத் தெருவில் படுத்திருந்த சொறி நாயின் மேலேற்றினான். அது, 'வீர்! வீர்!' என்று கத்திக்கொண்டே, காலை தூக்கி ஓடவாரம்பித்தது. நாய் போட்ட சத்தம் ராதுவின் ஓடிந்திருந்த மனதை ஒரு நிலைக்குக் கொண்டுவந்து சேர்த்தது. பிறகு அவனுடைய சைகிள், ரோட்டின்மேல் கவனத்துடனேயே செல்லத் தொடங்கிற்று.

வீட்டை யடைந்ததும், பிள்ளைகளைத்து வந்திருப்பதைக் கண்ட அவன் தாயார் சாப்பிடும்படிச் சொன்னாள். மணி இரவு எட்டா யிருந்தாலும் அவனுக்கு சாப்பாட்டின்மேல் கவனம் செல்லவில்லை. நினைவு முழுவதும் சற்றுமுன் பார்த்த நீலாவின்மேல் தான் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

ராதுவின் முகம் வாடி யிருப்பதைக் கண்ட அவன் தாயார் தங்கம்மாள் அவனுக்கேதோ காயலா வந்துவிட்டதென்று நினைத்து, "என்னடா குழந்தை உடம்புக்கு?" என்று மிகவும் கவலையால் கம்மிய குரலில் கேட்டாள்

"ஒண்ணுமில்லே, என்னவோ தலையை வலிக்கறது. எனக்கு இன்னைக்கு சாதம் கீதம் ஒண்ணும் வாண்டாம். பேசாமே படுத்துக்கப் போறேன்; என்னை எழுப்பாதே" என்று சொல்லிக்கொண்டே போய்த் தன் கட்டிலில் படுத்துக்கொண்டான். தங்கம்மாளுக்கு என்றுமில்லாக் கவலை மனதில்

குடிகொண்டது. ஒரே பிள்ளை. அதுவும் செல்ல மென்றால் கேழ்க்கவும் வேண்டுமா?

"அப்பா! டாக்டருக்காவது சொல்லி அனுப்பட்டுமாடா? உடம்பு என்ன செய்யறதுன்னு சொன்னு உடனே அவரை வரச் சொல்லலாம் என்ன சொல்றே" என்று துடிதுடித்தாள். ராதுவுக்கு அப்போது, தன் தாயாரைக் கண்டதும் எரிச்சல் வந்தது. இதென்னடா சனியன் என்று நினைத்துக்கொண்டே, "என்னத்துக் கம்மா வெறுமனே தொந்தரவு பண்ணறே. எனக்கு டாக்டரும் வேண்டாம், கீக்டரும் வாண்டாம்; போம்மா!" என்று கோபத்துடன் பதிலளித்தான். தங்கம்மாள் கவலையால் வாயை மூடிக்கொண்டு ஒன்றும் சொல்லாமல் போய்விட்டாள்.

ராதுவின் தகப்பனர் இறந்து ஐந்து வருஷங்களாகின்றன. போலீஸ் ஸர்க்கிள் இன்ஸ்பெக்டராக இருந்தவர். அவர் இருக்கும்போதே நன்ருகச் சம்பாதித்துச் சேர்த்து வைத்துவிட்டார். அவன் தகப்பனர் இறக்கும் போது ராது, இன்டர் படித்துக்கொண்டிருந்தான். தகப்பனர் இறந்ததும் அக் குடும்பத்திற்கு கஷ்டமொன்று மில்லை. தாயாரும், பிள்ளையும் சுகமாக இருந்த பணத்தைக் வைத்துக்கொண்டு வாழ்ந்து வந்தனர். தங்கம்மாள் கெட்டிக்காரி. கணவன் இறந்ததும் புது மாம்பலத்தில் கோபதித் தெருவில் பத்தாயிரத்தில் ஒரு அழகான வீடு கட்டிக்கொண்டு பிள்ளையுடன் அதிலிருந்தாள். ராதுவும் பி. ஏ. படித்துவிட்டு ஜெனரல் போஸ்டாபீசில் ஒரு வேலையிலமர்ந்தான். மாதம் எண்பது ரூபாய் சம்பளம்.

அவனை அனேகமாக மாம்பத்தில் தெரியாதவர்களே யில்லை. எல்லோருக்கும் ஸ்நேகம். அவனை ஆபீஸ் போகும் நேரம் தவிர, மீதி வேளைகளில் எல்லாம் முத்துவின் கடையில் பார்க்கலாம். முத்துவும், அவனும் கொஞ்ச நாளாக ஆருயிர் நண்பர்கள். அதுவும் முத்து கடை வைத்த இரண்டு மாதங்களாகத்தான். ஆனல் பரஸ்பரம் ஒருவருக்கொருவரே தெரியாது.

முத்து படித்தும் உத்தியோகம் கிடைக்காததால் வியாபாரம் வைத்துக் கொண்டான். நல்ல வியாபாரம். மாம்பலத்திலேயே முத்துவின் கடைக் காப்பிக் கொட்டையும், காப்பிப் பொடியுமென்றால் அதற்கு அலாதி மதிப்பு. பெரிய பெரிய மனிதர்களெல்லாம் அவ்விடத்திலேயே வாங்குவது வழக்கம். நாணயமான மனுஷ்யன்.

ராது தான் எதைப் பார்த்தாலும், முத்துவிடம் அதைச் சொல்லாமலிருக்கவே மாட்டான். அன்று அவன் பார்த்த காட்சியும், முத்துவின் கடைக்குப் போகும்போது பார்த்ததுதான். ஆனல் பெண்ணின் மோகத்தில் அதிமாய் ஈடுபட்டு விட்டதால், கடைக்குக் கூடப் போகாமல் நேரே வீடு திரும்பி விட்டான்.

மறுநாள் பொழுது விடிந்ததும், விடியாததுமாய் நேரே இரவு பார்த்த அவ் வீட்டண்டை போனன். வீடு பூட்டியிருந்தது. தெருவில் 'டூ லெட்' போர்டும் தொங்கிக் கொண்டிருந்தது. இதைப் பார்த்ததும் ராதுவுக்குத் துக்கமும், ஆச்சர்யமுமாகச் சேர்ந்து திடுக்கிடச் செய்தது. இரவு இருந்தவர்கள் ஒரே ராத்திரியில் எப்படி ஒரு வீட்டைக் காலி செய்திருக்கக் கூடுமென்பது அவனுக்குப் புரியவில்லை.

அவன் மனமுடைந்து போனன். ஆபீஸுக்கு ஒரு வாரம் லீவ் போட்டுவிட்டு மாம்பலத்தில் ஒரு தெரு விடாமல் தினமும் சுற்றிப் பார்த்தான். பயனில்லை. எட்டு நாட்களும் எட்டு நிமிஷங்களாக ஓடிவிட்டன. மனதுக்குக் கொஞ்சமும் நிம்மதி ஏற்படவில்லை. அவன் மனதில் பலவித எண்ணங்கள் உண்டாயின. பைத்தியம் பிடித்தவன்

போல் காணப்பட்டான். கடைசியாக உத்தியோகம், வீடு, தாயார் இவற்றை எல்லாம் விட்டு விட்டுக் கிளம்பி எங்கே யாவது போய்விடுவது என்று தீர்மா னித்தான்.

இதுவரையும் முத்துவின் கடைக்குப் போகாத ராது அன்று கடைசியாகப் போய், இதுவரை நடந்த சம்பவங்க ளையும், இனி தான் எண்ணி யிருக் கும் காரியத்தையும் சொல்லி, அவனி டம் விடைபெற்றுக்கொண்டு வரலா மென்று கடைக்குச் சென்றான்.

நடந்த விஷயங்கள் பூராவும் அவனி டம் பாடம் ஒப்பித்து விட்டுத், தான் இனிக் கலியாணம் செய்து கொள்ளா மல் சந்நியாசம் எடுத்துக் கொள்ளத் தீர்மானித்திருப்பதாகவும் கூறி முடித் தான். அப்போது முத்துவின் முகத்தில் ஒருவிதப் புதிய சந்தோ ஷச் சின்னங்கள் காணப்பட்டன.

இப்படி அவர்கள் பேசிக்கொண்டி ருக்கும்போதே ராதுவின் கண்களைத் திடீரென்று ஒரு காட்சி கவர்ந்தது. அவனுக்கு எங்குமில்லாத ஆனந்தமும், ஆச்சர்யமும் அப்போது கரைபுரண் டெழுந்தது.

"அடேமுத்து! அதோ பாத்தியாடா? அதே பொண்ணுதாண்டா." என்று முத்துவின் கடைக்கு எதிரிலுள்ள ஜவுளிக் கடையில் நுழைந்த ஒரு பெண்ணையும் தாயாரையும் சுட்டிக் காட்டி வாயைப் பிளந்தான் ராது. முத்துவுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. கொல் என்று சிரித்து விட்டு, "அடபயித்தியமே! இவளையா சொன்னே. எனக்கு முன்னமேயே நீ வீட்டு அடையாளம் சொல்லரப்பவே தெரியும். சரி, ஊரெல்லாம் தேடிவிட் டேன்னு சொன்னயே வைத்திய ராமன் தெருவில் போய் பார்த்தாயா?"

"இல்லேடா; அங்கயா இருக்கா; நிஜமாகவா?"

"ஆமாண்டப்பா ஆமாம்."

"அப்படின்னா எப்படியாவது அவ.........!"

"எப்படியாவது அவளை என்ன? நீதான் சந்நியாசியாய் போயிடப் போறேன்று சொன்னயே."

"ஹூம்!......வந்து...."

"சரி, அப்பவனு அவளை கலியாணம் பண்ணிகிறயா? உங்கம்மா ஒப்புக் கொள்ளுவாளா சொல்லு?"

"ரெடியா! கட்டாயம் ஒப்புத்துப் பாள்......எண்டா முத்து அவ என் னமோ உன்கையில் இருக்காப்போல பேசறயே."

"ஆமாம், என்கையிலேதான் இருக் கா. என் சொந்த தங்கை நீலாதான் அவள். நீ இதுவரையில் அவளைப் பார் த்தது இல்லை." என்றான் முத்து. ராதுவுக்கு உடனே உடல் நடுங்க ஆரம்பித்தது. நாக்குக் குழறிக் கொ ண்டே, "ஸாரி முத்து. ரொம்பவும் மன்னிச்சுக்கணம். யாரோன்னு நினைச் சுட்டேன், உன் தங்கைன்னு எனக் குத் தெரியாது." என்றான் ராது

"பரவாயில்லப்பா! பயப்படாதே நானும் அவள் கலியாணத்திற்கு வேண்டிய உன் ஞாபகமில்லாமலே இந்த தென்னிந்தியா பூராவும் அலைஞ் சுட்டேன். கடைசியில் இன்றுதான் உன்னுடைய ஞாபகம் திடீர்ன்னு வந் தது; கேட்க வேண்டு மென்று நினைச் சிண்டிருந்தேன். தெய்வ சங்கல்பம் நீயே.......!" என்றான் முத்து.

இது நடந்த மறுவாரத்திலேயே கலியாணமான ராதுவும் நீலாவும் அவர்கள் வீட்டு மாடியில் காதல் விளை யாட்டு விளையாடிக் கொண்டிருந்தார் கள் என்பதை நேயர்களுக்கு நான் சொல்ல வேண்டுமா?

துக்கடாக் கதை

(எஸ். ஆர். எஸ்.)

மாஜி முனிசிபல் கமிஷனர் ஸ்ரீ கந்தசாமி முதலியார் புளுமவுண்டன் எக்ஸ்பிரஸில் தன்னுடைய குமாரன் ராஜரத்தினத்தைப் பார்க்க கோவையிலிருந்து சென்னைக்கு வந்தார். ராஜரத்தினம் சென்னையில் தன் தாயாருடைய சுற்றத்தாருடன் இருந்துகொண்டு டாக்டருக்குப் படித்துக்கொண்டிருக்கிறான்.

ஸ்டேஷனுக்குத் தன் புத்திரன் வராதது கண்டு முதலியார் ஓர் டாக்ஸி வைத்துக்கொண்டு ராஜரத்தினத்தின் இருப்பிடத்துக்குப் போனார். வீடு சேர்ந்ததும் டிரைவர் சாமான்களை எடுத்து வைத்துவிட்டு பணத்திற்காக கையை நீட்டினான்.

'படுக்கை?' என்றார் முதலியார்.

"படுக்கையைக் காணலீங்களே!" என்றான் டிரைவர்.

"சரியாய்ப் போச்சுது. ரயிலில் மேல் மெத்தையில் போட்டிருந்தேன். ஜல்தி ஸ்டேஷனுக்குப் போன் செய்தால் கிடைக்கும்; எங்கே கிட்டத்தில் 'போன்' இருக்கிறது?" என்று கேட்டார்.

அந்த வீட்டிற்கு கொஞ்சம் அருகில் உள்ள ஒருபெரிய கட்டடத்தில் போன் இருப்பதாக அழைத்துச் சென்றான் ராஜரத்தினம். அங்கிருந்த டாக்டரிடம் உத்தரவு பெற்று டெலிபோனிடம் சென்றார். டெலிபோன்டிரக்டரி எனப்படும் புத்தகத்தைத் தேடினார். அது கிடைக்கவில்லை. ஆனால் அதை வராண்டாவில் ஒருவன் சுக்கு நூறாக கிழித்துக் கொண்டிருந்தான். ஏதோ பைத்தியம் போலிருக்கு என்று எண்ணிக் கொண்டே டெலிபோன் ஆபீஸை நேராகக் கூப்பிட்டார், பதிலே வரவில்லை. 2ம் தரம் முயற்சித்தார். 3ம் தரம், 4ம் தரம் ஒன்றுக்கும் பதிலே வரவில்லை. 5ம் தரம் ராஜரத்தினமும் கூப்பிட்டுப் பார்த்தான்.

"இங்கே கொடு ராஜு, இதுதான் கடைசீதரம், நேரம் ஆவுது. பதில் வராட்டி ஸ்டேஷனுக்கு நேராகப் போய் விடலாம். போன் கெட்டிருக்குதோ என்னவோ" என்று சொல்லிக் கொண்டே டயல் செய்தார் முதலியார்.

"இதென்ன தொந்திரவு! என்ன வேண்டும்?" என்று கடைசியாக பதில் வந்தது.

"இதோடு 20 தரம் கூப்பிட்டாய் விட்டது. இதுதான் மரியாதையா? அரைமணி நேரமாகக் கூப்பிடுகிறேன். யாரோ என்ற அலக்ஷியமா? நான் யார் தெரியுமா?"

"நீர் யார் என்று தெரியாவிட்டாலும், நீர் பேசும் இடம், நீர் எப்படிப் பட்டவர் என்பதைத் தெரிவிக்கிறது. நீர் ஓர் கிறுக்குத்தானே?" என்று பலத்த சிரிப்புடன் பதில் வந்தது.

முதலியாருக்குக் கோபம் பொங்கி வந்தது. டெலிபோனை லொடக் என்று மாட்டிவிட்டுத் திரும்பினார். அவர் கண்ணைப் பறிக்கும் படியாக எதிரில் ஓர் பித்தளை போர்டு தொங்கியது. அதில் "கீழ்பாக்கம் பைத்தியக்கார ஆஸ்பத்திரி" என்று எழுதியிருந்தது.

இந்தியா, பர்மா, சிலோன், ரங்கூன், மலேயா முதலிய நாடுகளில்
பிரசித்தி பெற்று யாவராலும் புகழப்பெற்ற
பழனி வைத்தியாசிரியர் சி. எம். சாமி

மன்மத குளிகை

உபயோகியுங்கள் !

தாதுபுஷ்டியில் மன்மதனேவென்று மயங்குவார்கள். இதற்கு நிகரான ஔஷதமில்லை! ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம்!! என்றும் திடகாத்திரர்களாய், வீரபுருஷர்களாய் நல்ல ஆரோக்கியமும், பலமும் பெற்று, இல்லற இன்பத்தை அனுபவிப்பீர்கள். இக்குளிகை பலஹீனம், நரம்புத் தளர்ச்சி, களைப்பு, தாகம் முதலியவைகளை நீக்கி, ஜீரண சக்தி, இரத்த விருத்தி, தாதுபுஷ்டி முதலியவைகளை உண்டாக்குவதில் பெயர் பெற்றது. பலத்தையும், ஆண்மையையும் கொடுத்து, போக காலத்தில் வெகு நேரம் வரையில் விந்தைக்கட்டி, ஸ்கலிதமாகாமல் தடுத்து இன்பத்தைக் கொடுக்கும்.

60 குளிகை விலை ரூ. 5—0—0. 20 குளிகை விலை ரூ. 2—0—0

பிரமேகநிவாரணி

எந்த மருந்திலும் தீராத எவ்வளவு நாட்பட்டதானலும் இதில் நிச்சயமாய்த் தீரும். பிரமேகம், இரத்தமேகம், தந்தி மேகம், வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, குத்து எரிச்சல் நீரோடு விந்து கலந்து விழுதல் முதலியன குணமாகும்.

புட்டி 1-க்கு விலை ரூ. 2—0—0. தபால் சார்ஜ் வேறு.

தலைமை ஆபீஸ்:—

மலையப்பசாமி வைத்தியசாலை,
பழனி. S. I. R.

பிராஞ்சுகள்:—

மலையப்பசாமி வைத்தியசாலை,
1/54, அருணசல நாய்க்கன் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, மதராஸ்.

195, செட்டியார் தெரு, கொழும்பு.
COLOMBO, CEYLON.

புத்தகப் பார்வை

"கபாலி"

சென்னை மைலாப்பூரிலிருந்து இந்த 40-ம் வருஷத்தில் தோன்றி வெளிவந்திருக்கும் 'கபாலி' என்ற தமிழ் பத்திரிகையைக் கண்டபின் "ஏதேது, தமிழ் சினிமா பத்திரிகா உலகம் கூட முன்னுக்கு வந்து விடும் போலிருக்கிறதே!" என்று ஆச்சரியப் பட்டுப் போனேன்.

முதலிலே பத்திரிகையின் முகப்பின் அழகிலேயே மூழ்கிப் போய் விட்டேன். 'கபாலி' என்ற பெயர் எப்படி மனதைக் கவருகிறதோ அதே போல் அதை அட்டையில் அச்சடித்திருக்கும் முறை கண்களைக் கவருவதாக இருக்கிறது. முகப்பில் பிரபல சினிமா நடி ஒருவர் வாசகர்களை வரவேற்பதற்காக மந்தஹாசத்துடன் உட்கார்ந்திருக்கிறார்.

உட்புறம் ஏட்டைத் திருப்பினேன். தலையங்கத்தில், கலைகளைப்பற்றியும், அவை இடைக்காலத்தில் க்ஷீணித்துப் போனதைப் பற்றியும், அந்தக் கலைகளுக்கு மறுமலர்ச்சி எவ்வாறு தருவதென்பதைப்பற்றியும், கலைவளர்ச்சிக்கு பத்திரிகைகள் எப்படி உதவ முடியும் என்பதையும் தெளிவாகச் சொல்லி 'கபாலி'யை தாம் கலைவளர்ச்சிக்காகவே ஆரம்பித் திருப்பதாகவும் சாங்கோபாங்கமாய் அதன் ஆசிரியர் எழுதியிருக்கிறார்.

இன்னும் உள்ளே போனால் ஒருவர் 'பிலிம் அகராதி' என்ற தலைப்பில் சினிமா உலகத்திற்குச் சாட்டை கொடுத்திருக்கிறார். அதற்கடுத்தாற் போல் ஒரு ரஸமான கதை ரஸிகர்களுக்கு நல்விருந்தாக அமைந்திருக்கிறது. இன்னும் இப்பத்திரிகையில் நூதனமான பல தலைப்புகளின் கீழ் சினிமா விஷயங்களும், நுட்பங்களும் ஏராளமாக விளக்கப்பட்டிருக்கின்றன. இடையிலே நாலு பக்கம் ஆர்ட் தாளில் சித்திர அனுபந்தம் வேறே பத்திரிகையின் அணிகலன் போல் இருக்கிறது.

யுத்தம் நடக்கும் இந்த சமயத்தில் காகிதம், முதலியவைகளின் விலை ஒத்தைக்கு நாலு பங்கு ஏறி விற்கும் பொழுதுகூட 'கபாலி' இவ்வளவு சிறந்த முறையில் ஒரு அணா விலையில் வெளிவந்திருப்பது பாராட்டுவதற்குறியது.

கபாலி தன் தலையங்கத்தில் கூறுவதுபோல் என்றும் கலைக்குத் தொண்டு புரிந்து லக்ஷியப் பத்திரிகையாகவே இருக்குமென்று பூரணமாய் நம்புகிறேன். கபாலீஸ்வரரை அடிக்கடி நினைக்கும்படி நமக்கு ஞாபகமூட்டுவதற்கு வந்த 'கபாலி' எல்லா நலனும் பெற்று விளங்கட்டும். கபாலி வேண்டுவோர், மானேஜர் கபாலி, கபாலி டாக்கீஸ் பில்டிங்ஸ், மைலாப்பூர், மதராஸ் என்ற விலாசத்துக்கு எழுதுங்கள்.

தமிழ்க் கொடி.

தமிழ் பாஷையை வளர்ப்பதற்கு நம் நாட்டில் ஒரு கோஷ்டி கிளம்பியது. அந்த கோஷ்டி தன் தாய்த் தமிழை வளர்ப்பதற்காக "ஹிந்தி வீல்க! தமில் வால்க!" என்று கோஷமிட்டது. காங்கிரஸுக்கு இலவச

சகஸ்ரநாமம் செய்தது. பத்திரிகை ஆபீஸ்களின் மீதெல்லாம் மலைப் பிஞ்சு தத்துவத்தைப் பிரயோகித்தது. பாடசாலைகளுக்கு முன்னால் போய் தாராக்ரஹம் செய்தது. பீச்சில் சென்று சூடான சொற்பொழிவுகளை ஆற்றிற்று.

ஆனால் தமிழை வளர்ப்பதற்கு உண்மையானதும், ஒழுங்கானதுமான வழிகள் அவைகள்தானா? இல்லவேயில்லை. குற்றுயிராய்க் கிடக்கும் தமிழ் மொழிக்குப் புத்துயிர் அளிக்க எவ்வளவோ நல்ல வழிகள் இருக்கின்றன.

இதை நிரூபிப்பதற்குத்தான் இன்று 'தமிழ்க்கொடி' என்ற ஒரு மாதாந்திரப் பத்திரிகை வெளிவந்திருக்கிறது.

"மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமையில்லை.
திறமான புலமையெனில் வெளி நாட்டார்,
அதை வணக்கம் செய்தல் வேண்டும்..."

என்று பாரதியார் கூறியதுபோல் இந்தத் தமிழ் கொடி வெறும் காலப் போக்குக்கு மட்டும் உதவாமல், வெளி நாட்டாரும் நம் தமிழை வணக்கம் செய்யத்தக்க தொண்டுகளை ஆற்றி உதவவும் வந்திருக்கிறது.

அன்பர்காள்,

இச் சஞ்சிகையின்கண் பல பேரறிஞர்களின் புனைந்துரைகளும், கவிஞர்களின் பாக்களும், கற்பனையாளர்கள் பொறித்த கதை விருந்துகளும் இராநிற்கின்றன.

நந்தமிழ் நாடு இதுபோது தோன்றிய 'தமிழ்க் கொடி'யால் பண்டைட இடுக் கண்களை அறவே துறந்து விடுதலை பெறும் என்று இறும்பூ தெய்துகின்றனம்.

(ஓ! இதேது தமிழ்க் கொடியைப் படித்தபின் எனக்குக்கூட செந்தமிழ் நடை வந்துவிடும் போலிருக்கிறதே!)

இப் பத்திரிகையில் அனேகம் பகுதிகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. முதலில் எதற்காக இப்படிப் பகுதிகள் பிரித்திருக்கிறார்கள் என்று எண்ணினேன். ஆனால் அந்தந்தப் பகுதிகளின் கீழ் "ஆராய்ச்சி அறிவை வளர்க்கும்" "இலக்கியம் இன்பத்தை அளிக்கும்" 'கதைகள் களிப்பைத் தரும்' என்று பிராசத்துடன் இருப்பதைக் கண்டபின்தான் அந்தந்தப் பகுதிகளின் பிரயோஜனத்தை அறிந்தேன்.

மலாக்கா தமிழ் நாடு இல்லாவிட்டாலும் தமிழ் பக்தி நிறைந்த அனேகந் தமிழர் நிறைந்த இடம் அது. அப்படிப்பட்ட இடத்திலிருந்து வரும் ஒரு செந்தமிழ்ப் பத்திரிகையை நாம் ஆதரிப்பது கடமை.

பத்திரிகை நல்ல காகிதத்தில் சுத்தமாக அச்சிடப்பட்டிருக்கிறது. அட்டை கவர்ச்சியாயிருந்தாலும் முகப்புப் படம் நல்ல சித்திரக்காரரைக் கொண்டு எழுதப்பட்டிருக்கலாம். இந்த யுத்த சமயத்தில் இது இருக்கும் மதிப்பிற்கு 20 காசு விலை மிகவும் குறைந்ததே.

கட்டுரைகளின் நடை இன்னும் சிறிது தளர்த்தப்படலாம். ஆனால் அது முடியாதென எண்ணுகிறேன். ஏனெனில் 'தமிழ்க் கொடி'யில் எழுதியுள்ள அவ்வளவு பேரும் அசல் தமிழ் பண்டிதர்களல்லவா!

தோன்றுகிறாள்! பிப்ரவரி 10-ம் தேதியன்று!

"சினிமா தேவி"

சிறந்த மாத வெளியீடு. தனிப்பிரதி விலை அரையணா.

டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் எழுதவும்.

"சினிமா தேவி" ஆபீஸ், 14, ராமசாமித் தெரு, மண்ணடி, மதராஸ்.

கீழ்க்கண்ட இடங்களில்

பொது அறிவுப்போட்டிக் கூபன்கள்

ஸ்டாக் செய்யப்பட்டிருக்கின்றன.

வேண்டுவோர் இனாமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

1. ஸிட்டி நியூஸ் ஏஜன்ஸி, 98. A. வாலாஜா ரோடு, மவுண்ட்ரோடு, மதராஸ். (தர்பார் ஹோட்டல் சமீபம்)
2. சுகானந்தாஸ்டால், பெரியகடை வீதி, கோயம்புத்தூர்.
3. எஸ். மாரியப்ப கோன், 42. வடக்கு சித்திரவீதி, மதுரை.
4. எஸ். மாசிலாமணி பிள்ளை, தெப்பக்குளம். திருச்சி.
5. ஜி. வி. எம். சுந்தரம், நியூஸ் ஏஜண்டு திருக்கோயிலூர்.
6. எஸ். சங்கர நாராயணன் செட்டியார், இம்பீரியல் சோடா பாக்டரி, மெயின் ரோடு, தேன்காசி.
7. கே. ரெங்கசாமி முதலியார், நியூஸ் ஏஜண்டு, மெயின் ரோடு, மேட்டுப்பாளையம்.
8. எ. எஸ். சுப்பிரமணியம், கொரனுடு, மாயவரம்.
9. நியூஸ் அண்டு ஜெனரல் மார்ட், சேலம்.
10. டி. எம். கருப்பண்ணன், நியூஸ் ஏஜண்டு, மானோஜியப்பா தெரு, தஞ்சாவூர்.
11. கே. சுடலை முத்துப்பிள்ளை, நியூஸ் ஏஜண்டு, தூத்துக்குடி.
12. கே. முத்து செட்டியார், புக்ஸெல்லர், ஈரோடு.
13. A. நாராயணசாமி அய்யர், ஈஸ்வரன் கோயில். மேலவீதி, [திண்டிவனம்.
14. ஏ. எல். ஏ. கருப்பன் செட்டியார், பருப்பூரணி மேல்புரம், முத்துப்பட்டினம், காரைக்குடி.
15. M. லக்ஷ்மணப் பிள்ளை, கமிஷன் ஏஜண்டு, உளுந்தூர்பேட்டை.
16. என். நடராஜ முதலியார், நியூஸ் ஏஜண்டு 50, வடக்கு ரதவீதி ஸ்ரீவில்லிபுத்தூர்.
17. கே. வேணுபிள்ளை, நியூஸ் ஏஜண்டு, திருநெல்வேலி ஜங்ஷன்.
18. விநாயகம் அண்டு கம்பெனி, பெஸண்டு ரோடு, கும்பகோணம்.
19. எஸ். சேதுராமலிங்கம் பிள்ளை, 2/17. மதுரை ரோடு [விருதுநகர்.
20. இ. எஸ். காளிதாஸ் பிள்ளை, ஸ்ரீஷண்முகர் 7-ம் திருநாள் மண்டபம், திருச்செந்தூர்.
21. V. S. அருணாசல மூப்பனார், பெரிய புளியம்பட்டி. அருப்புக்கோட்டை.
22. நேஷனல் புக்ஸ்டால், சுல்தான் பேட்டை, பாலக்காடு.
23. எ. எஸ். முத்துகிருஷ்ணன், மர்ச்சண்டு, 7-கமிஷரி பஜார் [வேலூர்.
24. ஆர். நாராயணசாமி ஆச்சாரி, பித்தளைபாத்திர வியாபாரம் திண்டுக்கல்.
25. என். குப்புசாமி முதலியார், சோடா ஷாப், கடைத்தெரு, விழுப்புரம்.

மற்ற எல்லா ஊர் ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

அல்லது எமக்கே நேரில் எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

"சந்திரோதயம்" **60, தம்பு செட்டி தெரு, சென்னை.**

"பொது அறிவு"ப் போட்டி—57

முடிவு தேதி 8—2—1940

பிரவேசக் கட்டணம் ஒரு கூபனுக்கு அணா 4.

ஒரு ரூபாய்க்கு ஐந்து கூபன்கள் அனுப்பலாம்.

போட்டியின் சரியான விடை ஸீல் போட்ட கவரில், சென்னை இந்தோ கமர்ஷியல் பாங்கியில் டெபாஸிட் செய்யப்பட்டிருக்கிறது.

விடைகள் கண்டு பிடிக்க வேண்டிய விதம்:

வெள்ளைக் கட்டங்களில் தரப்பட்டிருக்கும் எண்களைப் பாருங்கள். ஒவ்வொன்றிலிருந்தும் இடமிருந்து வலமாகவோ, அல்லது மேலிருந்து கீழாகவோ வார்த்தைகள் ஆரம்பிக்கின்றன. ஒரு எண்ணிலிருந்து ஆரம்பிக்கும் வார்த்தை எப்பக்கமாகச் செல்லுகிறதோ அப்பக்கத்திலுள்ள கறுப்புக் கட்டத்தின் முன் அது முடிவடையும். ஒவ்வொரு வெள்ளைக் கட்டத்திலும் ஒவ்வொரு எழுத்துத்தான் எழுதலாம்.

உதாரணமாக:—முதற் குறிப்பு, (இடமிருந்து வலமுள்ளது) இந்த ஆலைகள் நம் நாட்டில் இப்போது அதிகம் என்றிருக்கிறது; கரும்பு சரியான விடை. இவ்விதமே மற்ற விடைகளையும் கண்டு பிடிக்கவேண்டும்.

மேலிருந்து கீழ் குறிப்பைப் பாருங்கள்:—கச்சு என்ற விடை சரியாக அமைகிறது.

'பொது அறிவு'ப் போட்டி—57

1 க	ரு	ம்	2 பு	■	3 தா		■	■	4 ப
ச்	■	■	5	6 ரா		■	7 எ		து
8 சு	9	டி	■	ட்	■	10 பா		■	
■		■	11 ஆ		■	த்	ல	■	■
12	க்	13 க		■	14 வீ		■	15 இ	
■	16 கு		■	17 ச	■		■		■
18 நா	■	19 கு	ம்		ர	ம்	■	■	20
21 ட		■	■	ப	■	■	22 ச	■	த்
	■	23	ங்		■	24 ச		த	தீ
25 ம்		■	■	■	■	■		■	■

முடிவு தேதி 8—2—1940

இந்தப் "பொது அறிவு"ப் போட்டி 57-ல் கலந்து கொள்வதில் ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதென்றும், சட்டப்படி கட்டுப் படுத்துவதென்றும் ஒப்புக் கொள்கிறேன்.

முழுப்பெயர்

ஊர்

ஜில்லா

கூபன் நெ................

'பொது அறிவு'ப் போட்டி—57

1 க	ரு	ம்	2 பு	■	3 தா		■	■	4 ப
ச்	■	■	5	6 ரா		■	7 எ		து
8 சு	9	டி	■	ட்	■	10 பா		■	
■		■	11 ஆ		■	த்	லை	■	■
12	க்	13 க		■	14 வீ		■	15 இ	
■	16 கு		■	17 ச	■		■		■
18 நா	■	19 கு	ம்		ர	ம்	■	■	20
21 ட		■	■	ப	■	■	22 ச	■	த்
	■	23	ந்		■	24 ச		த	தீ
25 ம்		■	■	■	■	■		■	■

முடிவு தேதி **8—2—1940**

இந்தப் "பொது அறிவு'ப் போட்டி 57-ல் கலந்து கொள்வதில் ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதென்றும், சட்டப்படி கட்டுப் படுத்துவ தென்றும் ஒப்புக் கொள் கிறேன்.

முழுப் பெயர்

ஊர்

ஜில்லா

கூபன் நெ................

போட்டி நிபந்தனைகள்

(1) ஒவ்வொரு விடைக்கும் **பிரவேசக் கட்டணம் அணு 4.** பிரவேசக் கட்டணத்தை மணியார்டர் மூலம்தான் அனுப்பவேண்டும். சந்தாத் தொகை முதலிய வேறு எதுவும் இந்த மணியார்டருடன் சேர்த்து அனுப்பக்கூடாது. அந்தந்தப் போட்டிக்குத் தனித்தனி மணியார்டராக அனுப்ப வேண்டுமே யல்லாது ஒரே மணியார்டரில் ஒரு போட்டிக்கு மேற்பட்ட போட்டிகளுக்கு பிரவேசக் கட்டணத் தொகைகள் அனுப்பக்கூடாது.

உள்ளூர் வாசிகள் போட்டி முடிவு தேதியன்று மாலை 6-மணிக்குள் நமதாபீசிலுள்ள கவுண்டரில் கூபன்களைக் கவரில் அடக்கம் செய்து, கூபன் எண்ணிக்கையும் விலாசமும் மேல்கவரில் எழுதி பிரவேசக் கட்டணத்துடன் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளலாம்.

(2) ஒருவர் எத்தனை கூபன்களேனும் ஒரே கவரில் அனுப்பலாம். ஆனால், ஒவ்வொரு கூபனுக்கும் பிரவேசக் கட்டணம் அணு நான்கு செலுத்துவதுடன் பணம் அனுப்பியதற்கு அத்தாட்சியாக மணியார்டர் ரசீதும் சேர்த்து விடையுடன் அனுப்பவேண்டும்.

மணியார்டர் ரசீது இல்லாமல் வரும் கூபன்கள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டா தென்பதை நேயர்கள் நன்கு கவனிக்கவேண்டும். மணியார்டர் கூபனிலும் விடையனுப்பும் கவர்மேலும், போட்டியின் நம்பரையும், அனுப்பப்படும் கூபன்களின் மொத்த நம்பரையும் எழுதவேண்டும். விடை கூபனிலும் மணியார்டர் கூபனிலும் விடை அனுப்புபவரின் பெயரும், முழு விலாசமும் தெளிவாக எழுதவேண்டும்.

(3) ஒன்றுக்கு மேற்பட்ட கூபன்கள் அனுப்புகிறவர்கள் கூபன்களில் வரிசைக் கிரமமாக நம்பர் போடவேண்டும்.

(4) விடைக் கூபன்களை மையினால் தெளிவாக எழுதியனுப்ப வேண்டும். பென்சிலால் எழுதப்பட்ட கூபன்களும், கிழிந்த கூபன்களும், அடித்தல், திருத்தல்களும் அங்கீகரிக்கப்படமாட்டாது.

(5) விடைகள் முடிவு தேதிக்குள் வந்து சேரும்படி அனுப்பவேண்டும். முடிவு தேதிக்குப் பிறகும், அல்லது முடிவு தேதியில் குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகும் வந்து சேரும் விடைகள் கவனிக்கப்படமாட்டாது.

(6) போட்டி ஆசிரியரின் விடைக்கு எழுத்துக்கு எழுத்து சரியான விடை அனுப்புபவருக்கு முதற் பரிசும், அடுத்தபடி சரியாயிருக்கும் விடை அனுப்புபவருக்கு இரண்டாவது பரிசும் முறையே மூன்றாவது பரிசும் அளிக்கப்படும். ஒன்றுக்குமேல் சரியான விடைகள் வந்தால் பரிசுத்தொகை பகிர்ந்தளிக்கப்படும். எவருமே சரியானவிடை அனுப்பாவிட்டால் கூடுமானவரையில் சரியானவிடை அனுப்புபவருக்கு முதற் பரிசும், மற்றப் பரிசுகள் இதே முறையிலும் அளிக்கப்படும் ஒவ்வொரு தவறுள்ள வார்த்தையும் ஒரு பிழையாகக் கருதப்படும்.

ஏதாவது ஒன்று அல்லது பல கட்டங்களை எழுதாமல் விட்டுவிட்டால் பூராக்கூபனும் நிராகரிக்கப்படும். பரிசளிக்கும் விஷயத்தில் போட்டி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. இந்தப் போட்டியில் முதற்பரிசு பெறுபவருக்கு மற்றப் பரிசும் பெற உரிமையுண்டு. ஒருவரே ஒன்றுக்கு மேற்பட்ட முதற் பரிசும் பெறலாம்.

(7) போட்டியின் தீர்ப்பு சம்பந்தமாக யாதொரு விதமான கடிதப் போக்குவரத்தும் வைத்துக்கொள்ளப் படமாட்டாது.

(8) சந்திரோதயம் காரியாலயத்திலும், அதனோடு சம்பந்தப்பட்ட பிற காரியாலயத்திலும் உள்ளவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

(9) கூபன்கள் தபாலிலோ மற்றெவ்விதமாகவோ தவறிவிட்டால் அதற்குப் போட்டி ஆசிரியர் எவ்விதத்திலும் ஜவாப்தாரியாகமாட்டார். ஒருவர் பணம் அனுப்பி யிருக்கலாம். ஆயினும் அவர் அனுப்பிய கூபன் எமக்கு வந்து சேராமல் வழியில் தவரியிருப்பின் அதற்காக நாம் ஜவாப்தாரியாக மாட்டோம். போட்டி சம்பந்தமாக அனுப்பப்படும் தொகை எக்காரணங் கொண்டும் திருப்பியனுப்பப்படமாட்டாது.

(10 இப்போட்டியில் அளிக்கப்படும் பரிசுத் தொகையை வேறு கணக்கிற்கு மாற்றுவதோ அல்லது வேறு போட்டிக்குக் கட்டணமாக ஈடு செய்வதோ முடியாது.

(11) போட்டிக்காக ஒருவரனுப்பும் கூபன்களின் எண்ணிக்கைக்கு அவர்களனுப்பும் பிரவேசக் கட்டணத் தொகை தகுந்த ருஜுவாகக் கருதப்படமாட்டாது. இப்போட்டி சம்பந்தமாகப் போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதும் சட்ட பூர்வமாகக் கட்டுப்படுத்துவதுமாகும். இந்த நிபந்தனைகளுக் குட்பட்டுத்தான் நேயர்கள் சந்திரோதயம் போட்டிகளில் பிரவேசிக்கவேண்டும்.

(12) ஒரு போட்டி சம்பந்தமாய் செய்யப்படும் உரிமைகள் **(Claim)** ஷை போட்டி முடிந்த தேதியிலிருந்து இருபது நாட்களுக்குள் செய்யப்பட வேண்டும். பிறகு செய்யப்படும் உரிமைகளோ அல்லது முடிவு சம்பந்தமான விபரமறிய வேண்டிய வேண்டுகோள்களோ கவனிக்கப்படமாட்டா. இருபது-நாட்களுக்குப் பிறகு அப்போட்டி சம்பந்தமானவைகள் யாவும் அழித்து விடப்படும்.

(13) மேலே கண்ட நிபந்தனைகளுக்குப் புறம்பாக உள்ள எந்தக் கூபனும் அங்கீகரிக்கப்பட மாட்டாது.

போட்டியில் உபயோகித்துள்ள வார்த்தைகள் ஆனந்த விகடன் சித்திரப் போட்டி அகராதியிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன.

'பொது அறிவு'ப் போட்டி—57

1 க	ரு	ம்	2 பு	■	3 தா		■	■	4 ப
ச்	■	■	5	6 ரா		■	7 எ		து
8 சா	9	டி	■	ட்	■	10 பா		■	
■		■	11 ஆ		■	த்	லை	■	■
12	க்	13 கு		■	14 வீ		■	15 இ	
